வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

மாருதி Money Exchange (Pvt) Ltd.
MARUTHI MONEY EXCHANGE
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram – மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER – றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 01.05.2023 திங்கட்கிழமை | இதழ் : 143 | பக்கங்கள் : 16

# தேசமாக எதிர்ப்பு இல்லையேல் எங்களின் நிலங்கள் பறிபோகும்!

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைவர்

யாழ்ப்பாணம், மே 01

**“திட்டமிட்ட சிங்கள மயமாக்கல்களுக்கு ஒரு தேசமாக நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்காத வரைக்கும் எங்கள் நிலங்கள் பறிபோய்க்கொண்டே இருக்கும்”, என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.**



தையிட்டியில் தனியார் காணியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரையை அப்பகுதி மக்களின் அழைப்பின் பேரில் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செ. கஜேந்திரன் ஆகியோர் நேற்று சென்று பார்வையிட்டனர். இதைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட கஜேந்திரகுமார் மேலும் தெரிவித்தவை வருமாறு,

“தையிட்டி விகாரை அமைக்கப்பட்ட இடம் தனியாருக்கு சொந்தமானது. சட்டவிரோதமான இந்த கட்டட வேலைகள் இரண்டு வருடங்களுக்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்ட 15




### பெற்றோல் ரூ. 7, சுப்பர் டீசல் ரூ. 135

# எரிபொருட்களின் விலைகள் குறைப்பு

கொழும்பு, மே 01

பெற்றோல் 7 ரூபாயாலும், சுப்பர் டீசல் 135 ரூபாயாலும் குறைக்கப்பட்டுள்ளன.

இந்த எரிபொருள் விலை குறைப்பு நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வந்துள்ளன.

இதன்படி, 92 ஒக்ரைன் பெற்றோல் லீற்றர் 7 ரூபாயால் குறைக்கப்பட்டு 333 ரூபாயாகவும், 95 ஒக்ரைன் பெற்றோல் 10 ரூபாயால் குறைக்கப்பட்டு 365 ரூபாயாகவும், டீசல் 15 ரூபாயால் குறைக்கப்பட்டு 310 ரூபாயாகவும், சுப்பர் டீசல் 135 ரூபாயால் குறைக்கப்பட்டு 330 ரூபாயாகவும் விற்பனையாகும் என்று இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. (ஐ)

# மீண்டும் பலியெடுக்க ஆரம்பித்தது கொரோனா!

## இருவர் உயிரிழப்பு

கொழும்பு, மே 01

கொரோனா தொற்றால் நாட்டில் இருவர் உயிரிழந்தனர் என்று கொலன்னாவை மரண விசாரணை அதிகாரி காஞ்சனா விஜயநாயக்க தெரிவித்துள்ளார்.

மாத்தறை ஹமந்துவையை சேர்ந்த 56 வயது பெண்ணும், யட்டியந்தோட்டை பனாவத்தையில் வசிக்கும் 73 வயதுடைய ஆணுமே உயிரிழந்தனர்.

பெண் கடந்த வெள்ளிக்கிழமையும் ஆண் கடந்த சனிக்கிழமையும் உயிரிழந்தனர். 15

# இராணுவ ஆட்சி தோரணையில் ஆளுநர்கள் நடக்கின்றார்கள்!

## ஆளும் கட்சி கூட்டத்தில் சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 01

மேல் மாகாண சபையின் ஆளுநர் ரொஷான் குணதிலக, வடமேல் மாகாண சபையின் ஆளுநர் வசந்த கரன்னகொட ஆகியோருக்கு ஆளும் கட்சிக்குள் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

இந்த ஆளுநர்கள் இருவரும் இராணுவ ஆட்சியை மாகாணங்களில் நடத்துகின்றனர் என்று கடந்த வாரம் ஜனாதிபதி தலைமையில் நடந்த ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இந்த இரு ஆளுநர்கள் தொடர்பிலும் மதுர விதா 15

# நாட்டை பிளவுபடுத்துவதிலேயே தமிழ் கட்சிகள் குறியாகவுள்ளன!

## அமைச்சர் பந்துல சொல்கிறார்

கொழும்பு, மே 01

வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் கட்சியினர் நாட்டைப் பிளவுபடுத்துவதிலேயே குறியாகவுள்ளனர். அவர்களின் ஆட்டத்துக்கு ஆட முடியாதென அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அத்துடன், தமிழ் மக்களை உசுப்பேத்தி விடுவதுதான் தமிழ்க் கட்சியினரின் அன்றாட 15



# வெடுக்குநாறிமலைக்கு மக்கள் சுதந்திரமாக வர இடமளியுங்கள்

## இதுவே நீதிமன்ற கட்டளை என்கிறார் சுமந்திரன்

வவுனியா, மே 01

வெடுக்குநாறி மலைக்கு பொதுமக்கள் சுதந்திரமாக வந்துசெல்ல இடமளிக்கவேண்டும் என்பதே நீதிமன்றின் கட்டளையாக இருக்கின்றது என்று பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா, வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்துக்கு நேற்று சுமந்திரன் தலைமையிலான அரசியல்வாதிகள், சட்டத்தரணிகள் குழு சென்று வழிபாட்டில் ஈடுபட்டனர்.

இதன் பின்னர், செய் தியாளர்களுக்கு கருத்து 15



# அரசியல்வாதிகள், சட்டத்தரணிகள் வெடுக்குநாறிமலையில் வழிபாடு!

வவுனியா, மே 01

வெடுக்குநாறிமலை ஆதி சிவன் ஆலயத்துக்கு அரசியல்வாதிகள், சட்டத்தரணிகள் குழுவினர் நேற்று சென்று வழிபாட்டில் ஈடுபட்டனர்.

வவுனியா - நெடுங்கேணி - ஆதி சிவன் ஆலயத்தில் உடைக்கப்பட்ட விக்கிரகங்கள் கடந்த மார்ச் 26ஆம் திகதி உடைக்கப்பட்டன. இந்த ஆலயம் தொடர் பான வழக்கில் அங்கு பூசை வழி பாடுகளை செய்யவும் விக்கிரகங்களை பிர 15

# மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் பலி!

யாழ்ப்பாணம், மே 01

வாகன திருத்தகத்தில் ஒட்டுவேலையில் ஈடுபட்டவர் மின்சாரம் தாக்கி பலியானார்.

கோப்பாயில் நேற்று மாலை இடம்பெற்ற இந்த விபத்தில் யாழ்ப்பாணம் - ஆத்திசூடி வீதியை சேர்ந்த மூன்று பிள்ளை 15

# ஊழியர் சேமலாப நிதியத்துக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது!

## ஜனாதிபதி ரணில் உறுதியளிப்பு

கொழும்பு, மே 01

ஊழியர் சேமலாப நிதியத்துக்கு (ஈ. பி. எவ்.) எவ்வித பாதிப்பும் ஏற்படாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பில் தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்த சில தரப்பினர் முயற்சித்த போதிலும் உழைக்கும் மக்களுக்காக நிறுவப்பட்ட நிதியை பாதுகாக்க அரசாங்கம் 15



# ராஜபக்ஷக்களை மீளவும் பதவியில் அமர்த்த திட்டம்!

## முஜிபுர் ரஹ்மான் குற்றச்சாட்டு

கொழும்பு, மே 01

சிறீ லங்கா பொதுஜன பெரமுன அதன் மே தினக் கூட்டத்தில் மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் பிரதமராக நியமிக்கவும், ராஜபக்ஷக்களை மீண்டும் பதவிகளில் அமர்த்தவும் முயற்சிகள் இடம்பெறுகின்றன என்று ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி தலைவர் பணிமனையில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் 15

## இப்படியும் நடக்கிறது...!

ஒருவர் முகநூலில் தான் படித்ததில் பிடித்தது என்று ஒரு தகவலைப் பதிவுசெய்தி ருந்தார். ஆனால், அவர் எங்கி ருந்து படித்தார் என்பதைக் குறிப்பிட மறந்துவிட்டாரா அல்லது வேண்டுமென்றே தவிர்த்தாரா என்பது தெரிய வில்லை. அதில் உள்ள அமிர்த லிங்கத்தின் கதை ஏற்கனவே இந்த ஊர்க்குருவி அறிந்தது தான் என்பதால் மற்றைய தக வல்களும் சரியாக இருக்கும் என்று கருதி அதனை வாசகர் களுடன் பகிர்ந்துகொள்ள லாம் என்று தோன்றியது.

அந்த பதிவை அப்படியே கீழே தருகின்றேன்.

'சில வருடங்களுக்கு முன் னர் சுமந்திரனிடம் அரசியல் நிகழ்ச்சி ஒன்றில் தொகுப்பா ளர் 'நீங்கள் மதிப்பும் நம்பிக் கையும் வைத்துள்ள இளம் அரசியல்வாதிகள் என்று யாரைக் குறிப்பிடுவீர்கள்? ' என்று கேட்க,

அவர் சொன்ன பதில் :

ஒருவர் இராசமாணிக்கம் சாணக்கியன். மற்றொருவர் எனில், மனுஷ நாணயக்கார என்று... அவரைச் சொல்வேன் - என்றார்.

பல வருடங்களுக்கு முன் எழுபதுகளின் கடைசி. எண்பதுகளில், எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் பேசும்போதெல்லாம் அவ ரைப் பார்த்து புலி என்றும் அவரை காலிமுகத்திடலில் பாக்கு மரங்களில் கட்டித் தண்டனை வழங்கவேண்டும் எனவும் பேசியவர்களில் முக்கியமானவர் பாணந்துறை எம். பியான நெவில் பெர் ணான்டோ.

அவர் மீது பாராளுமன்றக் குழு விசாரணை நடத்தி அவரை ஜே. ஆர். அரசு எம். பி. பதவியிலிருந்து நீக்கவேண் டிய நிலை ஏற்பட்டது. அதற்கு ஒரு முக்கிய நாட்டின் தலையீடு காரணம் என்று அப்போது பேசப்பட்டது.

அதற்கு பின்னர் அவர் சுகவீனமுற்றவராகி படுக்கை யில் பல மாதங்கள் இருந்தார்.

மருத்துவமனையில் அவரை அமிர்தலிங்கமும் சிவசிதம்பரமும் சென்று பார்த்தனர்.

அமிரின் கைகளைப் பிடித்து அழுத அவர், நான் பேசியவை எல்லாம் நானாகப் பேசியவை அல்ல. அவற்றை எனக்குப் பேசும்படி பணித் தவர்கள் மேலே நன்றாக இருக் கிறார்கள். என்னைப் பேசச் சொன்னவர்கள் - ஊக்கியவர் கள் எவரும் என்னைப் பார்க்க இங்கு வரவில்லை. நீங்கள் தான் வந்தீர்கள். தமிழர்கள் எனது நண்பர்கள். நான் தமிழ ருக்கோ - உங்களுக்கோ மனதாலும் எதிரி அல்ல, இப்போதாவது என்னை மன் னியுங்கள். நேரம் வரும்போது உங்கள் மக்களிடம் சொல் லுங்கள்' என்று கண்ணீர் மல்கச் சொன்னாராம்.

மனுஷ பேசிய பேச்சு- (சாணக்கியனைப் புலி என்று பேசியது) அவருக்கு யாரும் சொல்லிக் கொடுத்ததாகத் தோன்றவில்லை.

அவரின் உள்ளத்திலிருந்து யாரும் சொல்லாமல் தோன்றி யவையாகவே 'படார்' என்று அவை வந்தன.

அவரது நல்ல நண்பரான சாணக்கியனே அவரிடமி ருந்து அந்த வார்த்தைகளை எதிர்பார்த்திருக்க மாட்டார்.

எண்பதுகளில் ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றபோது அதில் போட்டியிட்ட வாசு தேவ நாணயக்கார பற்றி பருத்தித்துறை பாராளுமன்ற உறுப்பினர் துரைரத்தினம் ஒரு கூட்டத்தில் பேசும்போது, தமது நகைச்சுவைப் பாணியில் 'இப்போது போட்டியிடுபவர் களில் நாணயம்மிக்க ஒருவ ராக அதாவது ஒப்பீட்டளவில் நாணயம்மிக்கவராக வாசுதேவ நாணயக்கார ஒருவரைச் சொல்லலாம். அதாவது கள்ளர்களில் நல்ல கள்ளன் போல. ஆனால், அவருக்கு தென்பகுதி மக்கள் எப்படி ஆதரிப்பார்கள் என்பது உங்களுக்குத் தெரியும்!' - என்றார்.

அமரர் துரைரத்தினம் அன்று சொன்னது போலவே வாசுதேவ நாணயக்காரவின் நாணயத்தை தமிழ் மக்கள் காலமாற்றத்தில் அறிந்துள் ளார்கள்.

மனுஷ நாணயகாரவின் நாணயத்தை வெகுசில நாட்க ளிலேயே சுமந்திரனும் சாணக் கியனும் உணர்ந்திருப்பார்கள்.

சில வருடங்களுக்கு முன் நான் பணியாற்றிய தொலைக் காட்சி நிலையம் ஒன்றில் அர சியல் நிகழ்ச்சிகள் செய்வதில் பிரபல்யம் பெற்றவரும் நான் மதித்த ஒரு சிலரில் ஒருவரு மான சகோதர மொழி ஊடகர் ஒருவரிடம் அவரது சகா ஒரு வர் ஏதோ ஒரு கதையில் 'டக்ளஸ் தேவானந்தாவை அழைப்போமா' என்று கேட்க, நான் குறிப்பிட்ட ஊடகர் 'அந்தாளும் புலி தானே மச்சான்' என்று சொன் னது மனுஷவின் நாவால் வந்த வடுக்களைக் கேட்டபோது நினைவுக்கு வந்தது.

அவர்களைப் பொறுத்தவ ரையில் இவர்கள் எல்லோ ருமே ஒன்று.

ஆனால், நம்மவர்கள்தான் இன்னும் ஒன்றாகாமல் இருக் கிறார்கள்!

-இதுதான் அந்த அன்பர் தான் படித்ததில் பிடித்தது என்று பகிர்ந்திருந்தார்.

இதைவிட இனி இந்தப் பத்தியில் எழுதுவதற்குத்தான் என்ன இருக்கின்றது?

**- ஊர்க்குருவி**

# தமிழ்த் தேசிய மே நாள் இன்று கிளிநொச்சியில்!

### சகலரையும் திரள சிறீதரன் அழைப்பு

கிளிநொச்சி, மே 01

தமிழ்த் தேசிய மே நாள் நிகழ்வு கிளிநொச்சி பசுமைப் பூங்கா வளாகத்தில் நடை பெறவுள்ளது. இந்த நிகழ்வில் அனைவரையும் பங்கேற்கு மாறு இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் அழைப்பு விடுத்துள்ளார்.

நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இந்த அழைப்பை விடுத்தார்.

சமகாலத்தில், தமிழ்த் தேசிய இனம்மீது கட்ட விழ்த்துவிடப்பட்டுள்ள சகல விதமான ஒடுக்குமுறைகளை யும் எதிர்த்தும், தாயகம் விடியும் வரை தமிழினம் ஓயாது எனும் அடிப்படை யில் குரல்கொடுக்கும் இளை ஞர் மற்றும் யுவதிகளின் பெருந் திரட்சியின்ஊடாக, பண்ணாட்டு சமூகத்துக்கும், அனைத்துத் தரப்பினரையும் இந்த மேநாளில் ஒன்றிணையுமாறு அவர் அழைத்துள்ளார். (ஐ)

# இலங்கையர் அனைவரும் சகோதரர்களாக சுயமரியாதையுடன் வாழ உறுதிபூணுவோம்!

### தமிழர் சமூக ஜனநாயக கட்சி

யாழ்ப்பாணம், மே 01

அனைத்து மக்களும் மான சீகமாக இலங்கையராக 'எம் முள் சண்டை செய்தாலும் சகோதரர் அன்றோ' என்ற வாறு எண்ணுவதற்கான சுய மரியாதை, கௌரவத்துடன் வாழ்வதற்கான நிலைமைகள் ஏற்படுத்தப்படவேண்டும் என்று இந்த மே நாளில் உறு திபூணுவோம் என்று தெரி வித்துள்ளார் தமிழர் சமூக ஜனநாயக கட்சியின் தலைவர் சிறீதரன் (சுகு).

உழைப்பாளர் தினத்தை முன்னிட்டு அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், "இந்த நாட் டின் மக்கள் அண்மைக்கால வரலாறு கண்டிராத சமூக, பொருளாதார துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கி றார்கள். 2022 ஆம் ஆண்டு மக்கள் எழுச்சி பிரளயமா னது. உணவு மருந்து எரிபொ ருள் அன்றாட வாழ்க்கையே பிரச்னையானது. இந்த சமூக, பொருளாதார துன்பங்களில் இருந்து இந்த நாட்டின் அனைத்து மக்களும் விடு தலை பெற வேண்டும்.

இப்படியே வாழும் தலை முறையும் வருங்காலத் தலை முறையும் வாழ்க்கையை ஓட்ட முடியாது. இனப்ப கைமை சூழலில் 30 வருடங்க ளுக்கு மேலாக இலட்சக் கணக்கான மக்களின் வாழ் வும் வளமும் சங்காரம் செய் யப்பட்டது -விரயமாக்கப் பட்டது. இனிமேலும் கசப் பான அனுபவங்கள் வேண் டாமே. இன, மத வெறுப்பை புறந்தள்ளி எல்லோரும் இன் புற்றிருக்கவே இந்த நாடு என்ற நிலையை உருவாக்க முயல்வோம். இலங்கை பல இன, மத, மொழி மக்களின் நாடு என்பதை காலதாமதம் இல்லாமல் உறுதி செய்ய ஆட்சியாளர்கள் உட்பட அனைத்து தரப்பினரும் முன் வரவேண்டும்!

ஊழல் வன்முறை போதை வஸ்து எமது சமூக சூழலில் இருந்து ஒழித்துக் கட்டப்பட வேண்டும். தமிழ், முஸ்லிம் மக்கள் வாழும் பிரதேசங்க ளில் நிகழும் மத, இன, கலா சார ஆக்கரமிப்புக்கள் இனி யும் தொடரக்கூடாது. 'வாழு வாழ விடு' என்ற சகிப்பு தன்மை வேண்டும். ஜனநாய கம் மனித உரிமைகளை அரித்தழித்து விடும் பயங் கரவாத எதிர்ப்பு பெயரிலான சட்டங்கள் வேண்டாம். அனைத்து மக்களும் மான சீகமாக இலங்கையராக 'எம் முள் சண்டை செய்தாலும் சகோதரர் அன்றோ' என்ற வாறு எண்ணுவதற்கான சுயமரியாதை, கௌரவத்து டன் வாழ்வதற்கான நிலை மைகள் ஏற்படுத்தப்படவேண் டும். உலகளாவிய அளவில் இலங்கையின் மதிப்பு மரி யாதை கண்ணியம் உயர்வ தற்கும் இந்த மாறுதல் அவசி யம். 'இன்று புதிதாய் பிறந் தோம்' என்றவாறு மே தின திடசங்கல்பம் கொள்வோம் - என்றுள்ளது. (ஐ)

# உழைப்போர் வாழ்வு விடியட்டும் சகலரும் சமவுரிமை பெறட்டும்!

### ஈழமக்கள் ஜனநாயக கட்சி

யாழ்ப்பாணம், மே 01

உழைக்கும் மக்களின் வாழ்வில் நிரந்தர விடியல் பிறக்கவும், சகல இன மத சமூக மக்களும் சமவுரிமை பெற்ற நிமிர் காலம் நிலைக்க வும் தொடர்ந்தும் உறுதியு டன் உழைப்போம் என்று ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளரும் கடற்றொழில் அமைச்சருமான கே. என். டக்ளஸ் தேவானந்தா தனது மேதின செய்தியில் தெரிவித் துள்ளார்.

மேலும், "உலகத் தொழி லாளர்களே, ஒடுக்கப்படு கின்ற தேச மக்களே - ஒன்று படுங்கள் என்ற மே தின அறை கூவலை ஏற்று, நாமும் அன்று எமது தேச விடுதலை போராட்டத்தின் வழி நின்று உழைக்கும் மக்களின் உரி மைக்காகவும் எழுச்சி கொண் டவர்கள். எவரும் எவரையும் அடிமை என்று கொள்ளாத சமத்துவ தேசத்தை வென்றிட புரட்சிகர இலட்சியக் கன வோடு நாம் நீதியான போராட்டக்களத்தில் நின்ற வர்கள்.

நீதியான எமது உரிமைப் போராட்டம் சகோதர இயக் கங்கள் மீதான மேலாதிக்க வன்முறைகளாலும், நாம் வெறுக்கும் உள்ளியக்க படு கொலைகளாலும், அநீதி யான அழிவு யுத்தமாக மாறிய போது, தீர்க்க தரிசனமாக எமது இலட்சிய பாதையை நாம் மாற்றியவர்கள். ஆனா லும் பயணத்தை நிறுத்த வில்லை. எந்த இலட்சிய கனவுகளுக்காக நாம் அன்று போராட எழுந்தோமா அதே இலட்சிய கனவுகளுடனே நாம் வகுத்த தேசிய நல்லி ணக்க பாதையிலும் தொடர்ந் தும் உழைத்து வருகின்றோம். எமக்கு கிடைத்த அரசியல் பலத்திற்கு ஏற்ற வகையில் முடிந்தளவு எமது மக்களுக் கான வெற்றிகளையும் அடைந்து வருகின்றோம்.

அரசியலில் சுதந்திரம், பொருளாதாரத்தில் சமத்து வம், சமூகத்தில் சகோதரத்து வம்,. இத்தகைய நாகரிக தேசத்தை உருவாக்கவே நாம் நடைமுறையில் உழைத்து வருகின்றோம்.

அரசியல் பலம் போதிய அளவு எமக்கு கிடைதிருந் தால் எமது மண்ணில் இன்ன மும் அதிக மாற்றங்கள் நிகழ்ந் திருக்கும். மக்களின் பிரச்னை கள் சகலதையும் ஆழ்மன உணர்வுகளில் நாமே ஏந்திநி ருப்பவர்கள்.

உழைப்பவர் இடர் தீர, வறியோர் வாழ்வுயர, நிலமற் றோர், வீடற்றோர் நிலை மாற, சமூக - சமத்துவ நீதி நிலவ, பெண்களின் சமவு ரிமை வெல்ல, வேலையற்ற இளைஞர் - யுவதிகளின் தேவைகள் நிறைவேற, எல் லோரும் எல்லாமும் பெற்று சரிநிகர் சமனென்ற நிமிர் வாழ்வு மலர, தொடர்ந்தும் உறுதியுடன் உழைப்போம். தமிழ், முஸ்லிம், சிங்கள உழைப்பவர் ஒற்றுமை ஓங் கட்டும் - என்றும் அவர் கூறி யுள்ளார். (ஐ)

Eelanadu ஈழநாடு
01.05.2023 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், சித்திரை 18

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ஒரு பேராட்டத்தின் வெற்றியென்பது என்ன?

சம்பந்தன் செயல் திறனுடன் இருந்த காலத்தில் தாம் இராஜதந்திர போராட்டத்தில் ஈடுபடுகிறார் என்று குறிப்பிட்டிருந்தார். அந்தப் போராட்டத்தின் மூலம் பெற்ற வெற்றி என்ன? இலங்கை தமிழரசு கட்சி பின்னர் தமிழர் விடுதலை கூட்டணி ஆகிய மிதவாத அரசியல் தலை மைகளின் போராட்டம் வெற்றியளிக்கவில்லை - எனவே, அதனை தொடர்ந்தும் நம்பிக் கொண்டிருப்பதில் பயனில்லையென்று கருதியதன் விளைவாகவே ஆயுத இயக்கங்கள் தோற்றம் பெற்றன. ஆனால், ஆயுத இயக்கங்களின் மூலமும் எதிர்பார்த்த வெற்றி கிட்டவில்லை.

இந்தப் போராட்டத்தை தங்களால் மட்டுமே முன்னெடுக்க முடியும் - ஏனையவர்கள் அனைவரும் விலைபோனவர்கள் - அவர்கள் இந்திய நிகழ்ச்சி நிரலுக்குள் இருப்பவர்கள் என்னும் அடிப்படையில்தான் விடுதலைப் புலிகள் இயக்கம் 90களுக்கு பின்னரான அரசியலை தனித்து முன்னெடுத்தது. ஆனால், புலிகளால் வெற்றிபெற முடிந்ததா? இந்த பின்புலத்தில் 1949 - 2009 வரையில் தமிழர்களால் முன்னெடுக்கப்பட்ட பேராட்டங்கள் எவையுமே வெற்றிபெறவில்லை. இந்தப் பின்புலத்தில் நோக்கினால், 2009இற்கு பின்னர் மீளவும் அன்றைய மிதவாதிகளால் முன்னெடுக்கப்பட்டு - எதிர்பார்த்த விளைவுகள் எதனையும் தராத வழிமுறைகளிலேயே மீளவும் தமிழ்த் தலைமைகள் தங்களின் நேரத்தை செலவிட்டன - செலவிட்டுக் கொண்டிருக்கின்றன.

இதில் சிலர் சிங்கள 'அறகலய'விலிருந்து தமிழ்த் தலைமைகள் கற்றுக்கொள்ளவில்லை. அவ்வாறானதொரு கிளர்ச்சிக்கு தமிழ் மக்களை தயார்படுத்துவதற்கான முயற்சியில் தமிழ் தலைமைகள் தோற்றுவிட்டன என்றவாறான கருத்துக்களை மக்கள் மத்தியில் திணிக்க முற்படுகின்றனர். அரசாங்கத்துக்கு எதிராக சிங்களவர்கள் மத்தியில் ஏற்பட்ட கிளர்ச்சி நடவடிக்கை முற்றிலும் மாறுபட்டது. அது ஒரு மோசமானதொரு பொருளாதார நெருக்கடியின் விளைவு - பிறிதொரு வகையில் கூறுவதனால் எரிவாயு, பெற்றோல், மின்சாரம் இல்லாமையால் விளைந்த கிளர்ச்சி. இவ்வாறான நெருக்கடிகள் இல்லாமலிருந்தால் ஒருபோதும் சிங்கள மத்தியதர வர்க்கம் ராஜபக்ஷக்களுக்கு எதிராக திரும்பியிருக்காது. ஏனெனில், அவர்கள் கோட்டாபய ராஜபக்ஷவை பெரிதாக நம்பினார்கள். அவரைப் போன்றதொரு தலைவர் மூலம்தான் சிங்கள மக்களை பாதுகாக்க முடியுமென்று நம்பினார்கள். ஆனால் அது சிதைவடைந்த போது, கோட்டாபயவுக்கு எதிரான கோபமாக அது திரும்பியது.

தமிழ் மக்கள் மத்தியிலிருந்து எவ்வாறு இவ்வாறான கோபத்தை எதிர்பார்க்க முடியும்? எந்த அடிப்படையில் - யார் மீது - தமிழ் மக்கள் கோபப்படுவது? சிங்கள ஆடசியாளர்கள் மீதா அல்லது கிடைத்த சந்தர்ப் பங்களையெல்லாம் கைநழுவிட்டுவிட்டு தமிழ்த் தேசியம் பேசிக்கொண்டிருக்கும் தமிழ் தலைமைகள் என்போர் மீதா? - யார் மீது தமிழ் மக்கள் கோபப்படுவது? அரசாங்கத்தின்மீது கோபப்படுவதில் எந்தவொரு பயனுமில்லை - ஏனெனில், அரசாங்கம் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவு செய்யும் என்றால் தமிழர்களுக்கான தனியான அரசியல் இயக்கமொன்றே தேவைப்பட்டிருக்காதல்லவா! எனவே, விடயங்களை தொகுத்து நோக்கினால் தமிழ் சூழலில் அரசியல் போராட்டங்களை முன்னெடுப்பது இலகுவான காரியமல்ல - ஏனெனில், மக்கள் நம்பிக்கை வைக்கக்கூடிய தலைவர்கள் - கட்சிகள் எவையுமில்லை. இந்த பின்புலத்தில் நோக்கினால் இதுவரை நடந்த போராட்டங்களும் வெற்றிபெறவில்லை- 2009இற்கு பின்னர் ஆங்காங்கே சில ஆயிரக்கணக்கில் மக்களை திரட்டிய அரசியல் நடவடிக்கைகளும் வெற்றிபெற்றவைகள் அல்ல. போராட்டத்தின் வெற்றியென்பது அது மக்களுக்கு கிடைக்கும் நன்மையால் அளவிடப்பட வேண்டும்.

## மே தின பொதுக்கூட்டம்

*யாழ்ப்பாணம், மே 01*

தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் உலக தொழிலாளர் தின பொதுக்கூட்டம் "செம் பசுமை மே தினம்" என்ற தொனிப்பொருளில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் இணைப்பாளர் நா. பார்த்தீபன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் கருத்துரைகளை யாழ். பல்கலைக்கழ அரசறிவியல் துறை தலைவர் பேராசிரியர் கே. ரி. கணேசிலிங்கம், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத் தலைவர் பொ. ஐங்கரநேசன், தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத் தலைவர் வி. எஸ். சிவகரன், அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் ஆகியோர் வழங்கவுள்ளனர். (ஐ)

## சக மாணவனின் தொண்டையில் ஊசியை ஏற்றிய மாணவன்

*கொழும்பு, மே 01*

இரண்டாம் தரத்தில் கல்வி கற்கும் மாணவன் ஒருவனுக்கு ஊசியால் கழுத்தில் குத்தியதில் அவர் படுகாயமடைந்தார். ஊசியை அகற்ற சுமார் மூன்றரை மணிநேர சத்திர சிகிச்சை மாணவனுக்கு நடைபெற்றதாக குருநாகல் போதனா மருத்துவமனை பேச்சாளர் தெரிவித்தார்.

பொல்பெத்திகமவில் பாடசாலை தொடங்கியதும், காலையில் வகுப்பறையில் இரு மாணவர்களிடையே ஏற்பட்ட வாக்கு வாதத்தின் போது, புத்தகப் பையில் மறைத்து வைத்திருந்த கூரிய ஊசியை மாணவர் ஒருவர், மற்ற மாணவரின் கழுத்தில் ஆழமாக குத்தியுள்ளார்.

இதனால் குறித்த மாணவன் வலியால் அலறி துடித்ததைக் கண்டு ஆசிரியர்களும் மாணவர்களும் பதற்றமடைந்தனர். இதையடுத்து விரைந்து செயல்பட்ட ஆசிரியர்கள் அவரை பொல்பெத்திகம ஆரம்ப மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். பின்னர் அங்கிருந்து குருநாகல் போதனா மருத்துவமனைக்கு சிறுவன் மாற்றப்பட்டார்.

அங்கு மூன்றரை மணி நேர சத்திர சிகிச்சையின் பின்னர் ஊசி அகற்றப்பட்டது. (ஐ)

## தம்பி கத்தியால் குத்தியதில் அண்ணன் உயிரிழந்தார்!

*கொழும்பு, மே 01*

அண்ணன் தம்பி இடையே ஏற்பட்ட வாக்குவாதம் கத்திக்குத்தில் முடிந்ததில் அண்ணன் பலியானார்.

சகோதரர்கள் இடையே காணி ஒன்று தொடர்பில் நீண்டகாலமாக நிலவி வந்தது.

இந்நிலையில் உயிரிழந்தவர் தனது தம்பி நடத்தும் இரவு உணவகத்துக்கு குடி போதையில் வந்ததாகவும், வாக்குவாதம் முற்றிய நிலையில் தம்பியார் கத்தியால் அண்ணனை குத்தினார் என்றும் அறிய வருகின்றது.

கத்தி குத்தில் பலத்த காயமடைந்த நபர் வெல்லவாய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மொனராகலை மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

வெல்லவாயவை சேர்ந்த 32 வயது நபரே உயிரிழந்தார். அவரின் தம்பியாரான 26 வயது நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)



## பசுமை அறிவொளி நிகழ்ச்சி நல்லூரில் நடைபெற்றது!


*யாழ்ப்பாணம், மே 01*

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நல்லூரில் நடைபெற்றது. மாணவர்களுக்குச் சுற்றுச்சூழல் பற்றிய அறிவையூட்டிச் சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களைச் சூழல் பாதுகாப்பில் பங்கேற்க வைக்கும் நோக்குடனும், அவர்களின் பன்முக ஆளுமையை விருத்திசெய்யும் நோக்குடனும் தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் பசுமை அறிவொளி என்ற பெயரில் மாணவர்களுக்கான வலுவூட்டல் திட்டமொன்றை முன்னெடுத்து வருகிறது. இதன் தொடர்ச்சியாகவே நல்லூரில் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் இந்நிகழ்ச்சி இடம்பெற்றுள்ளது.

ஓய்வுநிலைப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் கௌரி முகுந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டிருந்தார். சிறப்புரைஞர்களாகத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளர் ச.சர்வராஜா ஆகியோர் பங்கேற்றிருந்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் நூற்றுக்கணக்கான மாணவர்களும் பெற்றோர்களும் ஆர்வத்துடன் கலந்துகொண்டிருந்தார்கள். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



மே - 01 திங்கட்கிழமை
சோபகிருது வருடம் - சித்திரை 18
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : ஏகாதசி




**மேடம்**
புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளின் உயர்கல்வி, வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். எதிர் பார்த்த சலுகைகள் கிடைக்கும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**இடபம்**
அரசு காரியங்கள் சாதகமாக முடியும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். உத்தியோகத்தில் சில சூழ்ச்சிகளை கற்றுக் கொள்வீர்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**மிதுனம்**
சொத்து பிரச்னைக்கு நல்ல தீர்வு கிடைக்கும். முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். பழைய சரக்குகள் விற்கும். அதிகாரிகளுக்கு சில ஆலோசனையை தருவீர்கள். வெற்றியைத் தரும் நாள்.

**கடகம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன் - மனைவிக்குள் இருந்த பிணக்குகள் விலகும். அதிகாரிகள் உங்களுக்கு உதவுவார்கள். தள்ளிப் போன ஒப்பந்தம் கையெழுத்தாகும். மனசாட்சிபடி செயல்படுவீர்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். கணவன் - மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். கோபத்தை தவிர்க்க வேண்டிய நாள்.

**கன்னி**
திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். வாகனத்தில் கவனம் தேவை. பிரச்சினைகள் வந்து நீங்கும். மலதிகாரியிடம் மோதல்கள் வேண்டாமே. முன்னேறும் நாள்.

**துலாம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உடன் பிறந்தவர்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். புது முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். பொறுப்புகள் ஏற்பீர்கள். கௌரவம் கூடும் நாள்.

**விருட்சிகம்**
மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். பிடிவாதப் போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். அதிகாரிகள்,

**தனுசு**
கடந்த 2 நாட்களாக இருந்த அலைச்சல், டென ஷன் குறைந்து மனதில் மகிழ்ச்சியாக இருக்கும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். புதிய பாதை தெரியும் நாள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். வியாபாரத்தில் பெரிய இழப்புகள் ஏற்படக் கூடும். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். நாவடக்கம் தேவைப்படும் நாள்.

**கும்பம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**மீனம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். புதுமைகளைச் செய்து கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

# தமிழக அமைச்சரவையில் விரைவில் துறைகள் மாற்றம்!

சென்னை, மே 01

தமிழக அமைச்சரவையில் துறைகள் மாற்றியமைக்கப்படவுள்ளன. வரவு - செலவு கூட்டத் தொடருக்கு பின்னர் அமைச்சர்களின் செயல்பாடுகளை ஆராயும் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின், அமைச்சர்கள் மற்றும் துறை செயலாளர்களின் துறைகளை மாற்றவுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

அமைச்சர்கள் செயல்பாடுகளின் அடிப்படையில் மாற்றம் செய்ய முடிவு செய்துள்ளதாகவும் மேலும் புதுமுகங்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட உள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

தி.மு.க. ஆட்சியமைத்த பிறகு ஏற்கனவே 2 முறை அமைச்சரவையில் துறைகள்மாற்றியமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இன்னும் சில நாட்களில் இது குறித்த உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியாகும். (ஐ)

# கருணாநிதி நினைவு சின்னம் அமைக்க மத்திய அரசு நிபந்தனைகளுடன் அனுமதி!

சென்னை, மே 01

சென்னை மெரினா கடலில் முன்னாள் முதல்வர் மு. கருணாநிதி நினைவாக பேனா சின்னம் அமைக்க 15 நிபந்தனைகளுடன் மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதற்கு கடலோர ஒழுங்குமுறை மண்டலமும் விரைவில் ஒப்புதல் வழங்கவுள்ளது.

கருணாநிதியின் இலக்கியப் பணிகளைப் போற்றும் வகையில் மெரினா கடலில் 2.23 ஏக்கர் பரப்பில் அவருக்கு 81 கோடி (இந்திய) ரூபாய்செலவில், 134 அடி உயரத்தில் பிரம்மாண்ட பேனா நினைவுச் சின்னம் அமைக்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

இதற்காக, மெரினா கடற்கரையில் கருணாநிதி நினைவிடத்துக்குப் பின்பகுதியில் நுழைவுவாயில் அமைத்து, கடற்கரையில் இருந்து சுமார் 650 மீற்றர் தொலைவுக்கு கண்ணாடியிலான மேம்பாலம் அமைக்க முடிவு செய்யப்பட்டது.

இந்த நினைவுச் சின்னத்துக்கு கடற்கரை ஒழுங்குமுறை ஆணையம் முதல்கட்ட ஒப்புதல் வழங்கியதைத் தொடர்ந்து, மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சகத்தின் அனுமதி கோரி கடிதம் அனுப்பப்பட்டது. பொதுமக்கள் கருத்தறியுமாறு சுற்றுச்சூழல் அமைச்சகம் தெரிவித்தது. இதையடுத்து, நடந்த கருத்துக் கேட்பில் 22 பேர் ஆதரவாகவும் சீமான் உள்ளிட்ட 12 பேர் எதிராகவும் கருத்துரைத்தனர்.

இதைத் தொடர்ந்து 15 நிபந்தனைகளுடன் மத்திய சுற்றுச்சூழல் மதிப்பீட்டுக் குழு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இதையடுத்து தமிழக அரசு நினைவுச் சின்னத்தை அமைக்கும் பணிகளை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளது. கருணாநிதியின் பிறந்த தினமான கருணாநிதியின் 100ஆவது பிறந்த தினமான அடுத்த ஆண்டு ஜூன் 3ஆம் திகதி நினைவு சின்னத்தை திறக்க திட்டமிடப்பட்டுள்ளது. (ஐ)

# ம. தி. மு. க. கட்சியை தி. மு. கவுடன் சேர்க்குமாறு வைகோவுக்கு கடிதம்!

## கட்சி அவைத் தலைவர் எழுதியதால் பரபரப்பு

சென்னை, மே 01

குடும்ப மறுமலர்ச்சிக்கு தான் ம. தி. மு. க. என்பதை தங்களின் செயல்பாடு வெளிச்சம் போட்டு காட்டுகிறது என்று வைகோவுக்கு ம. தி. மு. க. மாநில அவைத் தலைவர் திருப்பூர் சு. துரைசாமி கடிதம் எழுதியுள்ளார்.

ம. தி. மு. க. பொதுச் செயலாளர் வைகோவுக்கு, திருப்பூர் சு.துரைசாமி 6ஆவது முறையாக கடந்த 3 நாட்களுக்கு முன்பு அனுப்பிய கடிதத்தில் கூறியிருப்பது:

கட்சி தொடங்கிய காலத்தில் வாரிசு அரசியலுக்கு எதிரான தங்கள் உணர்ச்சிமிகு உரைகளை கேட்டே இலட்சக்கணக்கானோர் உங்களை ஆதரித்தனர். தி. மு. கவில் தங்களுக்கு ஓர் இடர்பாடு வந்தபோது, எந்த குடும்ப அரசியலுக்கு எதிராக தொண்டர்களை தூண்டினீர்களோ அன்று ஒரு நிலைப்பாடும், இன்று அதற்கு நேர் எதிர் மாறாக தங்களின் குடும்பத்தினருக்கு தன்னிச்சையாக கழகத்தில் பொறுப்பு வழங்க முயற்சிக்கும் போது மாறுபட்ட நிலைப்பாடு எடுப்பதும், தங்களின் சந்தர்ப்பவாத அரசியலையும், கட்சியினரை மக்கள் எள்ளி நகையாட வைத்து விட்டது என்பதையும் தாங்கள் இன்னமும் உணராமல் உள்ளது வருந்தத்தக்க வேதனையான நிகழ்வே.

தங்கள் பேச்சை நம்பி வாழ்க்கையை இழந்த கட்சியினர் மேலும், மேலும் ஏமாற்றம் அடையாமல் இருக்க கழகத்தை, தாய்க் கழகமான தி. மு. கவுடன் இணைத்துவிடுவது சமகால அரசியலுக்கு சாலச் சிறந்தது என தெரிவித்துள்ளார்.

அவரின் இந்தக் கடிதம் கட்சியினர் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், வைகோ செய்தியாளர்களிடம் கூறுகையில், தொழில்சங்க சொத்துகளை கையாடல் செய்தார் என்று அவர் மீது வழக்கு உள்ளது. அதனை நீக்க அவர் தி. மு. கவுடன் இணைய விரும்பினார். தற்போது அவர் மீதான வழக்கு விசாரணை வர உள்ள நிலையில் இவ்வாறு கூறுகிறார். பரபரப்பை உருவாக்க வேண்டும், கட்சியில் குழப்பத்தை ஏற்படுத்த வேண்டும் என்பது தான் நோக்கம் - என்றார். (ஐ)

# ஆடு மேய்ப்பவருக்கு பொலிஸ் பாதுகாப்பு!

தூத்துக்குடி, மே 01

தூத்துக்குடியில் மணல் மாபியாக்களின் அச்சுறுத்தல் காரணமாக, கடந்த இரண்டரை ஆண்டுகளாக துப்பாக்கி ஏந்திய பொலிஸ் பாதுகாப்புடன் ஆடு மேய்த்து வருகிறார் விவசாயி பாலகிருஷ்ணன்.

மணல் மாபியாக்களின் ஆதிக்கத்துக்கு முடிவு கட்டி, தாமிரபரணி நதியைப் பாதுகாக்க வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழகத்தில் மணல் கொள்ளைக்கு எதிராக குரல் கொடுத்ததால் அரசு அதிகாரிகள், பொலிஸார், சமூக ஆர்வலர்கள் கொலை செய்யப்படும் சம்பவங்கள் தொடர்கின்றன. இவ்வாறான நிலையிலேயே மணல் மாபியாவுக்கு எதிராக போராடி வரும் விவசாயிக்கு துப்பாக்கி ஏந்திய பொலிஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.



தாமிரபரணி ஆற்றில் நடக்கும் மணல் கொள்ளைக்கு எதிராக இவர் தொடர்ச்சியாக போராடி வருகிறார். விவசாயியான இவர் தற்போது விவசாயப் பணிகள் இல்லாததால் ஆடு மேய்த்து வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அரசாங்கத்தின் செயல்பாடுகளால் மீண்டுமொரு மோதல் வெடிக்கலாம்!

## ஐ. நா. பிரதிநிதிகளிடம் சுமந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 01



**வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்றுவரும் காணி அபகரிப்பு, தொல்பொருள் வளச்சுரண்டல் என்பன தொடரும் பட்சத்தில் அங்கு மீண்டுமொரு மோதல் உருவாகக்கூடிய சாத்தியம் காணப்படுகிறது என்று ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகளிடம் சுட்டிக்காட்டியுள்ளார் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.**

அத்துடன், இத்தகைய முறையற்ற செயல்பாடுகளை உடனடியாக நிறுத்துமாறு இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்துமாறும் ஐ. நா. அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி ஆலோசகர் எட்வேர்ட் ரீஸ், ஐக்கிய நாடுகள் அபிவிருத்திச் செயற்திட்டத்தின் விசேட பிரதிநிதி சனா ரஸ்ஸலா ஆகியோருக்கும் தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரனுக்கும் இடையிலான சந்திப்பு வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பிலேயே இலங்கையில் சமாதானத்தையும் அமைதியையும் நிலைநாட்டுவதை இலக்காகக்கொண்டு ஐக்கிய நாடுகள் சபையால் முன்னெடுக்கப்பட்டுவரும் மோதல் தடுப்புச் செயல்திட்டம் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அதன்படி இலங்கையில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கான செயவடதிட்டங்கள் முன்னர் எவ்வாறு முன்னெடுக்கப்பட்டன? இனிவருங்காலங்களில் அவற்றை எவ்வாறு முன்னெடுக்கலாம்? என்பது குறித்து ஆராயப்பட்டது.

இதன்போது, இலங்கையில் உருவாகக்கூடிய சாத்தியப்பாட்டை கொண்டிருக்கும் இருவிதமான மோதல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகளிடம் எடுத்துரைத்த எம். ஏ. சுமந்திரன், அவற்றை உரியவாறு கையாள்வதற்கு மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் தெளிவுபடுத்தினார்.

முதலாவதாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்றுவரும் காணி அபகரிப்பு, மத வழிபாட்டுத்தலங்கள் மற்றும் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் அழிக்கப்படல் என்பன பற்றி ஐ.நா அதிகாரிகளிடம் சுட்டிக்காட்டிய சுமந்திரன், இவை தொடரும் பட்சத்தில் அங்கு மீண்டுமொரு மோதல் உருவாகக்கூடிய சாத்தியப்பாடு காணப்படுகிறது. எனவே இதுகுறித்து ஐ.நா அதிகாரிகள் அரசாங்கத்துடன் பேச்சு நடத்தவேண்டும் என்றும், மேற்குறிப்பிட்டவாறான முறையற்ற செயல்பாடுகளை நிறுத்துமாறு வலியுறுத்தவேண்டும் என்றும் சுமந்திரன் கேட்டுக் கொண்டார்.

இரண்டாவதாக நாடளாவிய ரீதியில் உருவாகக்கூடிய சாத்தியப்பாட்டைக் கொண்டிருக்கும் மோதல் குறித்துப் பிரஸ்தாபித்த அவர், 'அறகலய' உள்ளடங்கலாகக் கடந்த காலங்களில் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட போராட்டங்கள் ஊடாக எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் இன்னமும் அடையப்படாமை இதற்குக் காரணமாக அமையக் கூடும் என்று சுட்டிக்காட்டினார்.

இருப்பினும் அதனூடாகப் பல்வேறு நன்மைகள் அடையப்பட்டுள்ள நிலையில், மக்கள் எதிர்பார்க்கும் உண்மையான மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதற்கும் நேர்மறையான மாற்றங்களை ஏற்படுத்துவதற்கும் அவசியமான அழுத்தத்தை அரசாங்கத்துக்கு வழங்கவேண்டும் என்றும் எம்.ஏ.சுமந்திரன் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகளிடம் கேட்டுக் கொண்டார்.

(ஐ)






நூற்றாண்டு விழாவையொட்டி

# கனகராயன்குளம் ம. வியில் 100 பானைகளில் பொங்கல்!

வவுனியா, மே 01

வவுனியா -கனகராயன்குளம் மகா வித்தியாலயம் இந்த ஆண்டு நூறாவது ஆண்டில் கால் பதிக்கிறது. நூற்றாண்டு விழாவை பெருமளவில் கொண்டாட பாடசாலை சமூகம் ஏற்பாடுகளை செய்துவருகிறது.

இதன் ஓர் அங்கமாக, நேற்றுமுன்தினம் மரதன் ஓட்டமும் 100 பானைகளில் பொங்கல் பொங்கும் நிகழ்வும் நடைபெற்றன.

15 கி. மீற்ற தூரம் கொண்ட மரதன் ஓட்டத்தில் வவுனியா பூம்புகார் கண்ணகி வித்தியாலய மாணவன் -பா. விழிவண்ணன் முதலாமிடத்தையும் புதுக்குளம் மகாவித்தியாலய மாணவன் ர. பிரசாந் இரண்டாமிடத்தையும் சின்னடம்பன் பாரதி வித்தியாலய மாணவன் ச.கபிலன் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

இதனை தொடர்ந்து பாடசாலை வளாகத்தில் நூறு பானைகளில் பொங்கல் பொங்கி நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர், முன்னைநாள் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர், பாடசாலை பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

(ஐ)

# மோட்டார் சைக்கிளும் காரும் மோதுண்டதில் இளைஞர் பலி!

யாழ்ப்பாணம், மே 01

பேருந்தை முந்திச் செல்ல முற்பட்ட மோட்டார் சைக்கிள் எதிரே வந்த காருடன் மோதியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். மற்றவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு கோப்பாய் - பூதர்மடம் பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றது. இதில், அதே இடத்தை சேர்ந்த தவசீலன் வினோஜன் (வயது 20) என்பவரே உயிரிழந்தார். மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற இளைஞர் படுகாயமடைந்து யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து அச்சுவேலி நோக்கி பயணித்துக் கொண்டிருந்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தை கோப்பாய் பூதர்மட சந்திக்கு அருகில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் முந்தி செல்ல முற்பட்டபோது இந்த விபத்து இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டால் மருத்துவ சேவையை தொடரலாம்!

## மருத்துவர்கள் சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 01

உரிய பாதுகாப்பு வழங்கப்பட்டால் புத்தூர் அரசினர் ஆரம்ப சுகாதார பிரிவின் சேவைகளை நாளை முதல் ஆரம்பிக்க முடியுமென தெரிவிக்கப்பட்டது.

புத்தூர் அரசினர் ஆரம்ப சுகாதார பிரிவுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தி மருத்துவருக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்த சம்பவத்தையடுத்து மருத்துவமனையின் சேவைகள் இதுவரை இடம்பெறவில்லை.

தற்போது ஆரம்ப சுகாதார பிரிவுக்கு 24 மணி நேர பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பாதுகாப்பு தொடர்ச்சியாக உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

அத்துடன் மருத்துவமனையில் கண்காணிப்பு கமரா மற்றும் பாதுகாப்பு நடைமுறைகள் பின்பற்றப்பட்டால் அதனை மருத்துவமனை சங்கத்தினர் பரிசீலனை செய்து மருத்துவரை தொடர்ந்து பணி செய்வதற்கு அனுமதிக்க முடியும் என தெரிவித்தனர்.

அச்சுறுத்தல் விடுத்தவர்கள் கைது செய்யப்பட்ட நிலையில் குறித்த மருத்துவருக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்த காரணத்தால் தொடர்ந்தும் அவ்வாறான நிலை தோன்றலாம் என மருத்துவர் அச்சமடைந்துள்ளார்.

எனவே, மருத்துவர் தனது சேவையை மீண்டும் தொடர்வதற்கு ஆரம்ப சுகாதார பிரிவின் பாதுகாப்பு உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறு உறுதிப்படுத்தினால் தொடர்ந்தும் சேவையை மேற்கொள்ள முடியும் என மருத்துவ சங்கத்தினர் தெரிவித்தனர்.

(ஐ)

# நாடு முழுவதும் மே தினக் கூட்டங்கள் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரம்

கொழும்பு, மே 01

இன்று நடைபெறவுள்ள மே தினக் கூட்டங்களுக்கு பொலிஸார் விசேட பாதுகாப்பு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

கொழும்பு, நுகேகொடை, ஹற்றன் மற்றும் கண்டி ஆகிய நகரங்களில் இந்த பாதுகாப்பு வேலைத்திட்டம் அமுல் படுத்தவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ மேலும் தெரிவித்துள்ளார்.

இதன்படி, குறித்த பிரதேசங்களில் போக்குவரத்து பாதுகாப்பில், அதிக கவனம் செலுத்தப்பட்டு விசேட வேலைத்திட்டமொன்றும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

குறிப்பாக கொழும்பில் நடைபெறும் மே பேரணிகள் மற்றும் ஆர்ப்பாட்டங்களுக்காக 3,500 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடவுள்ளனர்.

குறிப்பாக, பல வீதிகள் ஒருவழிப்பாதையாக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஏனைய வீதிகளில் செல்லும் வாகனங்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில், போக்குவரத்து அதிகாரிகள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# பெரமுன கட்சியை சேர்ந்தவரே வடக்கு மாகாண ஆளுநராம்!

கொழும்பு, மே 01

வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருவர் நியமிக்கப்பட உள்ளார் என்று கொழும்பு உயர்மட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிழக்கு மாகாண ஆளுநராக செந்தில் தொண்டமான் மற்றும் சப்ரகமுவ மாகாணத்துக்கு நவீன் திஸநாயக்க வட மத்திய மாகாணத்திற்கு ரங்கபண்டார ஆகியோர் நியமிக்கப்பட உள்ளனர் என்றும் தெரிய வருகின்றது.

வடக்கு மாகாணத்துக்கு பெரமுன கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருவரையே நியமிக்க உள்ளதாக கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன என்று அறிய வருகின்றது.(ஐ-03)

### பயங்கரவாத எதிர்ப்பு சட்டம்

# ஆலோசனை, கருத்துகளை மே 30 வரை வழங்க முடியும்!

## நீதி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, மே 01

**புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்துக்கான ஆலோசனைகளையும் கருத்துகளையும் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை வழங்க முடியும் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகள் உட்பட எந்த நபருக்கும் இதற்கான வாய்ப்பு இருக்கிறது என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

தமது முன்மொழிவுகளை நீதியமைச்சகத்திடம் சமர்ப்பிக்க முடியும் என்றும் அந்த முன்மொழிவுகள் அனைத்தையும் கருத்தில் கொண்டு புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் குறித்து தீர்மானிக்கப்படும். இதனிடையே, பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் தொடர்பில் பல சுற்று கலந்துரையாடல்களை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது என்று அமைச்சர் தெரிவித்தார்.



திருத்தங்கள் உள்வாங்கப்பட்ட பின்னர் புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேசமயம், கடந்த 25ஆம் திகதி பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், அதற்கு எழுந்த எதிர்ப்புகளை தொடர்ந்து திருத்தத்தின் பின்னரே வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# யாழிலிருந்து கொழும்புக்கு அதிவிரைவு ரயில் பயணம்!

கொழும்பு, மே 01

அநுராதபுரத்திலிருந்து காங்கேசன்துறை வரையிலான ரயில் சேவை அடுத்த இரு மாதங்களில் மீளவும் ஆரம்பிக்கப்படும். இந்தப் பாதையால் யாழ்ப்பாணத்தில் இருந்து அதிவிரைவாக கொழும்பை அடைய முடியும் என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் பகுதியில் ஓமந்தை வரை நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற ரயில் பாதையின் நவீனமயமாக்கல் பணிகளின் முன்னேற்றம் தொடர்பாக நேரில் ஆராயும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இரண்டு மாதங்களுக்குள் அநுராதபுரத்திலிருந்து காங்கேசன்துறை வரையிலான புகையிரதப் பயணங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படும். புதிய ஸ்லிப்பர் கட்டைகள் மற்றும் தடங்கள் அமைப்பதன் மூலம் மணிக்கு 100 மைல் வேகத்தில் இயக்கக் கூடிய அதிநவீன ரயில் பாதையாக இது உருவாக்கப்படுகிறது.



குறிப்பாக மஹவ தொடக்கம் ஓமந்தை வரையிலான இத் திட்டத்துக்காக இந்திய கடன் திட்டத்தின் கீழ் 3,500 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. தற்போதைய பொருளாதார நெருக்கடியை கருத்தில் கொண்டு, இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்படும் மிகப்பெரிய அபிவிருத்தி திட்டமாக இத்திட்டம் அமைந்துள்ளது.

இந்தப் பாதை மூலம் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு அதிவிரைவாக பயணிக்க முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஐ)

# சிவில் பாதுகாப்பு படையை சேர்ந்தவர் 50 போதை மாத்திரைகளுடன் கைது!

வவுனியா, மே 01

50 போதைப்பொருள் மாத்திரைகளை விற்பனைக்காக வைத்திருந்த குற்றச்சாட்டில் சிவில் பாதுகாப்பு படையை சேர்ந்த ஒருவரை செட்டிகுளத்தில் வைத்து விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் கெப்பிற்றிகொலாவை சிவில் பாதுகாப்பு படை முகாமில் பணிபுரியும் நபர் என்று தெரிவிக்கப்பட்டது.

பொலிஸ் விசேட அதிரடிப் படையின் செட்டிகுளம் முகாமின் உப பொலிஸ் பரிசோதகர் குருசிங்க பிரதான பொலிஸ் குழுவினராலேயே சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ஐ)

# அமைச்சுகளின் செயல்திறனை கண்டறிய மதிப்பெண் முறைமை

## அடுத்த மாதம் முதல் அறிமுகம்

கொழும்பு, மே 01

அமைச்சுகள், அமைச்சின் செயலாளர்களின் செயல்திறனின் முன்னேற்றத்தை ஆய்வு செய்து காலாண்டுக்கு ஒருமுறை மாற்றங்களை செய்ய ஜனாதிபதி அலுவலகம் தாயாராகி வருகிறது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சுகள் மற்றும் அமைச்சின் செயலாளர்களுக்கு மதிப்பெண் அட்டை முறையை அடுத்த மாதம் முதல் அறிமுகப்படுத்த ஜனாதிபதி அலுவலகம் தயாராகி வருகிறது.

இந்த மறுஆய்வுத் திட்டத்தின் கீழ், நிகழ்ச்சித் திட்டங்களை செயல்படுத்துதல், அமைச்சகங்கள் மற்றும் அரச நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் செயலாளர்களின் செயல்பாடுகள் கண்காணிக்கப்படும் என்று ஜனாதிபதி அலுவலகத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பொதுமக்களின் நலனுக்காக அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகளின் முன்னேற்றம் நெருக்கமாக கண்காணிக்கப்படும். அத்துடன், இடமாற்றம் தொடர்பான முடிவை எடுப்பதற்கு முன் செயலர்கள் செயலாற்ற தவறிய பகுதிகளும் கவனத்தில் கொள்ளப்படும்.

இந்தத் திட்டத்தின் கீழ் 65 க்கு மேல் அதிக மதிப்பெண்கள் பெறுபவர்கள் அதே அமைச்சகத்தில் தக்க வைக்கப்படுவார்கள். இதேநேரத்தில் 50 முதல் 65 வரை உள்ளவர்கள் இடமாற்றத்துக்கு பரிசீலிக்கப்படுவார்கள் என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

அதேநேரம் 50 மதிப்பெண்களுக்கு கீழ் பெறுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். அவர்கள் அமைச்சின் செயலாளர் பதவியையும் இழக்க நேரிடலாம். ஒப்பந்த அடிப்படையில் இருப்பவர்கள் அவர்களது ஒப்பந்தத்தை முடித்துக் கொள்ளலாம்.

இதேவேளை, அமைச்சுகளின் செயலாளர்களாகவும் பணியாற்றுவதற்கு அதிகாரிகளை தெரிவு செய்யும் போது புள்ளி முறைமை கவனத்தில் கொள்ளப்படும். அத்துடன், அதிகாரிகள் மீதான தொடர் நடவடிக்கைகளுக்காக காலாண்டு அறிக்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

(ஐ)

# கைக்குண்டு, துப்பாக்கியுடன் இருவர் கொழும்பில் கைது!

கொழும்பு, மே 01

கொழும்பு வாதுவை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தம்பியகம பிரதேசத்தில், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட கைக்குண்டு மற்றும் 15 லீற்றர் மதுபானத்துடன் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வாதுவை பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயது நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை குருநாகல் கல்கமுவை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இகினியாகல பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இகினியாகல பிரதேசத்தை சேர்ந்த 24 வயது நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். (ஐ)

# 6 வயது சிறுமி துஷ்பிரயோகம்; வவுனியாவில் இளைஞர் கைது!

வவுனியா, மே 01

ஆறு வயது சிறுமியை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் ஓட்டோ சாரதியை பூவரசங்குளம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தந்தையில்லாத சிறுமியின் தாய் வெளிநாட்டில் பணிபுரிந்து வருகிறார். இந்த நிலையில், சிறுமி குறித்த ஓட்டோ சாரதியின் வீட்டில் தங்கவைக்கப்பட்டுள்ளார். இதற்காக சிறுமியின் தாயார் ஒரு தொகைப் பணத்தை மாதாந்தம் வழங்கி வருகின்றார்.

இந்த நிலையில், சிறுமி கடந்த சில நாட்களுக்கு முன்னர் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சிறுமியின் பிறப்புறுப்பில் இரத்தப் போக்கை அவதானித்த மருத்துவர்கள் பூவரசங்குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.

விசாரணையின்போது ஓட்டோ சாரதியான - இளைஞர் சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்தியமை தெரிய வந்தது. இதையடுத்து, சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். (ஐ)

# ஜனாதிபதி வேட்பாளர் விவகாரம் எவரும் வாயை திறக்கக்கூடாது!

## மொட்டு கட்சியினருக்கு வாய்ப்பூட்டு

கொழும்பு, மே 01

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் பகிரங்கமாக எதனையும் அறிவிக்க வேண்டாம் என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர்கள் கட்சியின் அமைச்சர்களுக்கு அறிவித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னும் ஒரு வருடத்துக்கும் மேல் உள்ள நிலையில், ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் பொதுஜன பெரமுன அமைச்சர்கள் கருத்து வெளியிடுவது சிக்கலாக உள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் அக் கட்சியின் அமைச்சர்கள் பலர் அரசியல் மேடைகளில் கருத்துக்களை வெளியிட்டு வருவதுடன், கட்சிக்குள் அது தொடர்பில் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இனிமேல் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் கருத்துக்களை வெளியிடுவது கட்சியின் எதிர்கால நடவடிக்கைகளுக்கு இடையூறாக அமையும் என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவே பொருத்தமானவர் என ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளர் பிரசன்ன ரணதுங்க மற்றும் மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர ஆகியோர் அண்மையில் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# காலிமுகத்திடல் போராட்டத்தின் பின்னணியை அறிய ஆணைக்குழு!

## அமைச்சர் பிரசன்ன வலியுறுத்துகிறார்

கொழும்பு, மே 01

**காலிமுகத்திடல் போராட்டத்தின் போது இடம்பெற்ற சம்பவங்களை ஆராய்வதற்கு, முழு அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமித்து விசாரணை நடத்த வேண்டும். அத்துடன், அந்த ஆணைக்குழுவுக்கு முழு அதிகாரமும் வழங்க வேண்டும் என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வலியுறுத்தியுள்ளார்.**

ஆளும் தரப்பு ஏற்கனவே ஜனாதிபதியிடம் முறையான கோரிக்கை விடுத்துள்ளதாகவும், அதற்கு ஜனாதிபதி சாதகமான பதிலை வழங்குவார் என்றும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

போராட்டத்தின் பின்னணியில் இருந்தவர்கள் யார் என்பதை கண்டறிந்து, பணம் செலவழித்து ஆதரவு அளித்தவர்கள் யார் என்பதை விசாரிக்க வேண்டும். பல்வேறு நபர்களால் எழுதப்பட்ட புத்தகங்களில் குறிப்பிடப்பட்டுள்ள உண்மைகளை முழுமையாக உண்மை என ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

போராட்டத்தின்போதும் இடம்பெற்ற வன்முறையின் போதும் முப்படையினரும் மௌனமாக செயல்பட்டது ஏன் என்பது கேள்விக்குறியாக உள்ளதாகவும், அவர்களுக்கு யார் உத்தரவு பிறப்பித்தது என்பதும் ஆராயப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டு மக்களை தூண்டிவிட்டு நாட்டின் சகல செயற்பாடுகளையும் சீர்குலைத்த இந்த போராட்டத்தின் உண்மையான தகவல்களை கண்டறிந்து நாட்டை இந்த நிலைக்கு தள்ளும் நபர்களுக்கு தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஐ)



# மோட்டார் சைக்கிள்கள் திருடிய இரண்டு சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, மே 01

கொழும்பு நகரில் நீண்ட காலமாக மோட்டார் சைக்கிள்கள், வாகனங்களின் பக்க கண்ணாடி திருட்டில் ஈடுபட்ட இரண்டு சந்தேகநபர்கள் வெள்ளவத்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்,

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து திருடப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த10 மோட்டார் சைக்கிள்களும் ஒரு முச்சக்கரவண்டியும் வாகன பக்க கண்ணாடிகள் 20 சோடியும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று வெள்ளவத்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்,

மேலும் திருடப்படும் கண்ணாடிகளை விற்பனை செய்த பஞ்சிகாவத்தை பகுதியைச் சேர்ந்த வியாபார நிலைய உரிமையாளர்கள் இருவரும் கைது செய்யப்பட்டு விசாரணைகளின் பின்னர் கல்கிசை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மாளிகாவத்தை மற்றும் தெமட்டகொட பகுதியை சேர்ந்த 35 மற்றும் 39 வயதுடைய சந்தேகநபர் என தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்கள் நீண்ட காலமாக கொழும்பு நகர பகுதிகளில் மோட்டார் சைக்கிள்களை நூதனமாக திருடி விற்பனையில் ஈடுபட்டு வந்தமை தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைத்தன. இதையடுத்து, வெள்ளவத்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் சுபாஸ் காந்தவலவின் பணிப்பில் வெள்ளவத்தை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதர் கேசாந் தலைமையிலான பிரியங்கர, சுரேந்திர, விஜயசிங்க, சமரவீர, சந்தன, கருணாதிலக, சில்வா, சஞ்சய் உள்ளிட்ட பொலிஸ் அணியினர் சந்தேகநபர்களை கைது செய்தனர். (ஐ)

# கந்தரோடையில் விகாரை அமைக்க பிக்கு முயற்சி!

யாழ்ப்பாணம், மே 01

கந்தோடையில் பிக்கு ஒருவர் விகாரை ஒன்றை அமைப்பதற்கான பணிகளை முன்னெடுத்து வருகிறார் என்று அறிய வருகின்றது.

சுன்னாகம் - கந்தரோடையில் தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்தமைக்கான அடையாளங்களும் அதன் எச்சங்களும் காணப்படுகின்றன. அவை தொல்லியல் திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன.

இந்நிலையில், தமிழ் பௌத்த எச்சங்கள் காணப்படும் இடத்துக்கு அருகில் நபர் ஒருவருக்கு சொந்தமான சுமார் 6 பரப்பு காணியை தென்னிலங்கையை சேர்ந்த பௌத்த பிக்கு ஒருவர் ஒரு வருடத்துக்கு முன்னர் பணம் கொடுத்து வாங்கியுள்ளார்.

இதையடுத்து, அந்த பிக்கு, குறித்த காணிக்குள் தான் விகாரை ஒன்றை அமைக்கவுள்ளதாக தெரிவித்தும், விகாரை அமைப்பதால் காணிக்கு அருகில் உள்ள தொல்லியல் எச்சங்களுக்கு பாதிப்பு ஏற்படுமா, குறித்த காணியில் விகாரை அமைக்கலாமா என அனுமதி கோரியும் தொல்லியல் திணைக்களத்துக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

இந்நிலையில், தொல்லியல் திணைக்களம் விகாரை அமைக்க அனுமதி வழங்கியவுடன், ஏனைய அனுமதிகளை விரைந்து பெற்று, விகாரை கட்டுமான பணிகளை தான் விரைந்து நிறைவேற்ற பிக்கு தயாராகவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# உணவு செயற்கை சுவையூட்டி களஞ்சியசாலை சிக்கியது!

கொழும்பு, மே 01

மருதானை தொழில்நுட்பக் கல்லூரி (ரெக்னிக்கல்) சந்தியில் உள்ள உணவுக் களஞ்சியசாலையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது, உணவை சுவையூட்ட பயன்படுத்தப்படும் செயற்கை வாசனை திரவிய தொகை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

காலாவதியான உணவும் காலாவதியாகாத உணவும் ஒரே இடத்தில் விநியோகம் செய்யப்பட்டதாக இந்தச் சுற்றிவளைப்புக்குப் பொறுப்பான சிரேஷ்ட விசாரணை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

காலாவதியான உணவுப் பொருட்களை பதுக்கி வைத்திருப்பதாக கிடைத்த முறைப்பாடு ஒன்றின் அடிப்படையிலேயே இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டது.

உணவை சுவைக்க பயன்படுத்தப்படும் இந்தச் செயற்கை சுவையூட்டிகள் 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளிலேயே காலாவதியாகிவிட்டது என கண்டறியப்பட்டுள்ளது. (ஐ)

# சடலம் மீட்பு

கொழும்பு, மே 01

கண்டியில் அடையாளம் காணப்படாத ஆணொருவரின் சடலத்தை பொலிஸார் நேற்று முன்தினம் மீட்டனர்.

கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ரணவக்க வீதி, பிகா ஓயாவிலிருந்து 80 வயது மதிக்கத்தக்க நபரொருவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டது.

சடலம் கண்டி போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஈஸ்டர் தாக்குதல் உண்மைகள் ஒரு வாரத்தில் வெளியிடப்படும்

## கத்தோலிக்க ஆயர் பேரவை

கொழும்பு, மே 01

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக, இதுவரை வெளிவராத உண்மைகள் இன்னும் ஒரு வாரத்தில் வெளியிடப்படும் என்று இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவர் அருட்தந்தை ஹரோல்ட் அந்தோனி பெரேரா தெரிவித்துள்ளார்.

அதில் உள்ள தகவல்களை அவதானிப்பது மிகவும் தீவிரமானது. எனவே இதற்காக சட்டத்தரணியின் உதவி நாடப்படவுள்ளது.

தற்கொலை தாக்குதல்களின் அறிக்கைகள் அடங்கிய ஆறு குறுந்தகடுகளை (சிப்) கடந்த வார இறுதியில் மறைமாவட்டத் தலைவரிடம் பொது பாதுகாப்பு அமைச்சர் கையளித்திருந்தார்.

இந்த விசாரணை அறிக்கைகள் கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்தின் கவனத்தை ஈர்த்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# "அரசு ராஜபக்ஷக்கள் வசமாகும் இன்று முதல் செயல்கள் ஆரம்பம்!"

கொழும்பு, மே 01

எமது மக்கள் பலத்தை வெளிப்படுத்துவோம். மக்களாணையுடன் ராஜபக்ஷக்கள் மீண்டும் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவார்கள். மே தின கூட்டத்தில் (இன்றையநாளில்) இருந்து செயல்பாட்டு ரீதியான அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவோம் என சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

மே தின கூட்டம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் சம்பவத்தால் மே தின கூட்டத்தை நடத்த முடியாமல் போனது. 2020 மற்றும் 2021ஆம் ஆண்டு கோவிட் பெருந்தொற்று தாக்கத்தால் கூட்டத்தை நடத்த முடியவில்லை. அதேபோல் 2022ஆம் ஆண்டு முறையற்ற போராட்டத்தால் மே தினக் கூட்டத்தை நடத்த முடியவில்லை.

பெரும் போராட்டத்துக்கு மத்தியில் நாடு தற்போது வழமைக்கு திரும்பியுள்ளது. மே தின கூட்டத்தை நடத்துவதற்கான வாய்ப்பை சகல அரசியல் கட்சிகளுக்கும் சிறீ லங்கா பொதுஜன பெரமுன ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

எமது மக்கள் பலத்தை நாளைய (இன்றைய) தினம் கெம்பல் மைதானத்தில் இடம்பெறும் மே தின கூட்டத்தில் வெளிப்படுத்துவோம். மக்களாணையுடன் ராஜபக்ஷக்கள் வெகுவிரைவில் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவார்கள் - என்றார். (ஐ)

# அமெரிக்க அரசை ஏமாற்றிய இலங்கை மருத்துவருக்கு சிறை

கொழும்பு, மே 01

அமெரிக்காவின் ஸ்ட்ராட்ஃபோர்ட் நகரில் மருத்துவ நிலையம் ஒன்றை நடத்தி வந்த இலங்கையை சேர்ந்த மருத்துவர் ஒருவர், சுகாதார சேவைகளை வழங்குவதாகத் தெரிவித்து அந்நாட்டு அரசாங்கத்திடமிருந்து சுமார் 8 இலட்சத்து 40 ஆயிரம் டொலர்களை - நம் நாட்டு மதிப்பில் சுமார் 26 கோடியே 56 இலட்சம் ரூபாயை பெற்று மோசடி செய்தார் என்ற குற்றத்துக்காக அவருக்கு 4 வருட சிறை விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கையைச் சேர்ந்த குறித்த மருத்துவர் கடந்த நவம்பரில் மோசடி குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டதால் தண்டனை நிலுவையில் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

மெடிகெயார் என்ற மருத்துவ கிளினிக்கின் உரிமையாளரும் தலைவருமான இவர், தனது மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளுக்கு மனநல சேவைகளை வழங்குவதற்காக மாநில மருத்துவ காப்பீட்டிலிருந்து சுமார் 8 இலட்சத்து 40 ஆயிரம் அமெரிக்க டொலர்களை பெற்று மோசடி செய்தார் என குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. (ஐ)

# என்னதான் பின்னணி?

## ‘காலிஸ்தான்’ அம்ருத்பால் சிங் கைதுசெய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டது மட்டும் மகிழ்ச்சிக்குரியதா?

# தினமணி கேள்வி எழுப்புகின்றது!



ஒருவழியாக காலிஸ்தான் தீவிரவாதி அம்ருத்பால் சிங் சாந்து சிறையிலடைக்கப்பட்டிருக்கிறார் என்று மகிழ்ச்சி அடைய முடியவில்லை. 35 வயது அம்ருத்பால் சிங்கைத் தேடிப் பிடிக்க காவல்துறை 37 நாள் திணற வேண்டி இருந்தது என்பது பாராட்டுக்குரியதல்ல. அம்ருத்பால் சிங் கைது செய்யப்பட்டாரா அல்லது சரணடைந்தாரா என்பதும்கூட விவாதத்திற்குரியதுதான்.

தான் நிச்சயித்த இடத்தில், அதாவது 40 ஆண்டுகளுக்கு முன்னார் பயங்கரவாதி ஜர்னைல் சிங் பிந்தரன்வாலேயின் சொந்த கிராமமான பஞ்சாப் மோகா மாவட்டம் ரோட் கிராமத்தில் உள்ள குருத்வாராவிலிருந்து அவராகவே வெளியே வந்தபோது கைது செய்யப்பட்டிருக்கிறார். அதுவும் எப்படி? பிந்தரன்வாலேவைப் போலவே உடையும், தலைப்பாகையும் அணிந்து கொண்டு, குருத்வாராவில் கூடியிருந்தவர்களிடம் உரையாற்றிவிட்டு, குருத்வாராவின் அடித்தளத்திற்குச் சென்று பிந்தரன்வாலே படத்துக்கு மரியாதை செலுத்திவிட்டு, வழக்கமான ‘சௌப்பாய்’ எனும் துதிகளை ஓதிவிட்டு வெளியே வந்து காவல்துறையிடம் தன்னை ஒப்படைத்துக் கொண்டிருக்கிறார்.

பிந்தரன்வாலேயின் ரோட் கிராமத்திலுள்ள அந்த ‘சந்த் கல்சா’ குருத்வாராவில்தான், கடந்த ஆண்டு செப்டம்பா மாதம் 29-ஆம் தேதி ‘தஸ்தர் பந்தி’ எனப்படும் தலைப்பாகை கட்டும் சடங்கை அவர் மேற்கொண்டார். அதாவது, தான் பிந்தரன்வாலேயின் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுவதாக அறிவித்தார். அவரது அனைத்துக் கோரிக்கைகளையும் ஏற்று, காவல்துறை அவரைக் கைது செய்திருப்பதை, ‘சரணடைந்தார்’ என்று கூறுவது தவறுதான்...

அம்ருத்பால் சிங் கைது செய்யப்பட்டு, அஸ்ஸாம் மாநிலம் திப்ரூகரிலுள்ள மத்திய சிறைச்சாலையில், ஏற்கெனவே அடைக்கப்பட்டிருக்கும் அவரது ஒன்பது கூட்டாளிகளுடன் இப்போது அடைக்கப்பட்டிருக்கிறார். தேடப்பட்டபோது, அவர் குறித்துக் காவல்துறை தினந்தோறும் புதுப்புதுத் தகவல்களைக் கசிய விட்டதும், ஊடகங்கள் அவற்றை பரபரப்பாக வெளியிட்டு தீவிரவாதி அம்ருத்பால் சிங்குக்கு ‘பிம்பம்’ ஏற்படுத்த முனைந்ததும் ஆபத்தானவை. தங்களால் கைது செய்ய முடியாத கையாலாகத்தனத்தை மறைப்பதற்கு, காவல்துறை கையாண்ட வழிமுறைகள் கண்டனத்துக்குரியவை.

> இந்தியாவிலிருந்து பிரிந்து, ‘காலிஸ்தான்’ என்கிற தனி நாடு கோரிக்கையுடன் வலம் வந்த அம்ருத்பாலை, மத்திய - மாநில உளவு அமைப்புகள் தடுக்கவில்லை என்று கூறுவதைவிட அவருக்கு மறைமுக அனுமதி வழங்கின என்றுதான் சொல்ல வேண்டும்.

அமிருதசரஸ் மாவட்டம் ஜல்லுபூர் கேரா கிராமத்தில் பிறந்த அம்ருத்பால் சிங், பொறியியல் பட்டயப் படிப்பில் வெற்றி பெற முடியாமல், பத்து ஆண்டுகளாக துபையில் சரக்கு லாரி ஓட்டிக் கொண்டிருந்தார். ஆறு மாதங்களுக்கு முன்னர்தான் இந்தியாவுக்கு வந்தார். அவரே வலியப் போய், விவசாயிகள் போராட்டத்தின்போது செங்கோட்டையில் காலிஸ்தான் கொடியை ஏற்றிய தீப் சிங் சித்து தொடங்கிய ‘பஞ்சாபின் வாரிசுகள்’ இயக்கத்தின் தலைவராகத் தன்னைத் தானே நியமித்துக் கொண்டார். தீப் சிங் சித்து மர்மமான முறையில் கொல்லப்பட்ட நிலையில், இவரைக் கேள்வி கேட்க யாரும் இல்லை. சித்துவின் குடும்பத்தினருக்கு இவர் யாரென்றுகூடத் தெரியாது.

இந்தப் பின்னணியில்தான் கடந்த ஆறு மாதங்களாக பஞ்சாப் மாநிலம் முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, தன்னை ‘பஞ்சாபின் வாரிசுகள்’ இயக்கத் தலைவராகவும், பிந்தரன்வாலேயின் வாரிசாகவும் நிலைநாட்டிக் கொள்ளும் முயற்சியில் அம்ருத்பால் சிங் ஈடுபட்டு வந்தார். இந்தியாவிலிருந்து பிரிந்து, ‘காலிஸ்தான்’ என்கிற தனி நாடு கோரிக்கையுடன் வலம் வந்த அம்ருத்பாலை, மத்திய - மாநில உளவு அமைப்புகள் தடுக்கவில்லை என்று கூறுவதைவிட அவருக்கு மறைமுக அனுமதி வழங்கின என்றுதான் சொல்ல வேண்டும்.



இரண்டு மாதங்களுக்கு முன்னர் அஜ்னலா காவல் நிலையத் தாக்குதல்தான், காவல்துறையின் தூக்கத்தைக் கலைத்தது. அம்ருத்பாலின் நெருங்கிய கூட்டாளியான லவ்ப்ரீத் சிங் தூஃபான் என்பவர் ஆள்கடத்தல் வழக்கில் கைது செய்யப்பட்டார். கத்தியும் துப்பாக்கியும் ஏந்திய அம்ருத்பாலின் நூற்றுக்கணக்கான ஆதரவாளர்கள், காலிஸ்தான் முழக்கங்களுடன் மோட்டார் சைக்கிளில் 60 கி.மீ. பேரணியாகப் பயணித்து, தடுப்புகளைத் தகர்த்து அஜ்னலா காவல் நிலையத்தில் நுழைந்தார்கள். பயந்து போன காவல்துறையினர் லவ்ப்ரீத்தை விடுவித்து அடிபணிந்தனர்.

போராட்டக்காரர்களை ஏன் தடுக்கவில்லை என்று கேட்டால், அவர்களின் கைகளில் புனித நூலான ‘குரு கிரந்த சாஹிப்’ இருந்தது என்பது காவலர்களின் பதில். சட்டப்படி, லவ்ப்ரீத்தை ஏன் நீதிமன்றத்தில் ஆஜராக்கவில்லை என்றால், பதிலில்லை. அதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர்தான் சண்டிகர் - மொஹால்லா எல்லையில், அம்ருத்பாலின் ஆதரவாளர்கள் காவல்துறை வாகனங்களை சேதப்படுத்திக் காவலர்களைத் தாக்கி இருக்கிறார்கள். அவர்கள் மீது ஏன் கிரிமினல் வழக்கு போடப்படவில்லை என்பதற்கும் பதிலில்லை.

அஜ்னலா தாக்குதலுக்காக வந்த பேரணியைத் தடுத்து நிறுத்தாமல் காவல்துறை ஏன் அனுமதித்தது என்கிற கேள்விக்கு விடை கண்டுபிடித்தால், அம்ருத்பால் சிங் உயிர்ப்பிக்க விரும்பும் ‘காலிஸ்தான்’ பிரச்னைக்கு தூபம் போடுபவர்களை அடையாளம் காண முடியும். அம்ருத்பால் சிங்கின் திடீர் வரவும், தடையில்லாத வளர்ச்சியும், இந்தியாவுக்கு எதிரான பிரசாரமும், அவருக்குக் கிடைக்கும் நிதியும் சந்தேகங்களை எழுப்புகின்றன.

கைது செய்யப்படும்போது, ‘நான் சரணடையத் தீர்மானித்துவிட்டேன். இந்தக் கைது முடிவல்ல, தொடக்கம்’ என்று அவர் ‘சந்த் கல்சா’ குருத்வாராவில் கூறியிருப்பது உண்மையாகிவிடக் கூடாது. பிந்தரன்வாலேயின் வளர்ச்சிக்குப் பின்னால் அரசியல் இருந்தது. அம்ருத்பால் சிங்கிற்கும் அதேபோல பின்னணி அல்லது ஆதரவு இருக்கும் என்று தோன்றுகிறது. இந்தியா விழித்துக் கொள்ளாவிட்டால், ஆபத்து காத்திருக்கிறது!
(தினமணி)

# கண்ணாடியில் நிலவைக் காட்டும் அரசியல்?

**நிலாந்தன்**

சில மாதங்களுக்கு முன் கனடாவுக்கு போக வெளிக்கிட்டு சிங்கப்பூர் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த 303 தமிழ்க் குடியேறிகளைக் குறித்துக் கேள்விப்பட்டோம். அவர்கள் வியட்நாமில் உள்ள இடைத்தங்கல் முகாம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களிற் பெரும்பாலானவர்கள் பொருளாதார காரணங்களுக்காக சட்டவிரோதமாகப் புலம் பெயர்ந்தவர்கள் என்று ஐநாவும் உலக பொது நிறுவனங்களும் நம்புவதாகத் தெரிகிறது. இந்த அடிப்படையில் அவர்களை ஐநாவின் அகதிகளுக்கு பொறுப்பான அமைப்பு பொறுப்பேற்கத் தயாரில்லை என்றும் தெரிகிறது. இதனால் அப்புலம்பெயரிகளில் ஒரு தொகுதி நாடு திரும்பிவிட்டது. ஏனைய தொகுதி படிப்படியாக நாடு திரும்பி வருகிறது.

இவர்கள் யாரும் விருப்பத்தோடு நாடு திரும்பவில்லை. ஏனென்றால் அவர்கள் நாட்டை விட்டுப் போக வேண்டும் என்ற விருப்பத்தோடு தான் ஆபத்தான கடல் வழியில் இறங்கினார்கள். எனவே அவர்கள் நாட்டுக்கு விருப்பத்தோடு திரும்பி வருகிறார்கள் என்று யாரும் கூற முடியாது. அவர்களில் ஒரு பகுதியினர் அவ்வாறு வர விரும்பாது ஐநாவிடம் அகதி அந்தஸ்து கோரி மேல்முறையீடு செய்தார்கள். ஆனால் அந்த மேல் முறையீடுகள் முதல் தடவை நிராகரிக்கப்பட்டன. அதில் ஒரு தொகுதியினர் மீண்டும் விண்ணப்பித்தார்கள். அதுவும் கடந்த வாரம் நிராகரிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அவர்கள் இந்த வாரம் நாடு திரும்புகிறார்கள். இந்நிலையில், வியட்நாமில் மிஞ்சியுள்ள தமிழ்ப் புலம்பெயரிகளையும் நாட்டுக்குத் திரும்பி அனுப்பும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாகத் தெரிகிறது.

இதில் இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயம் என்னவென்றால், நாடு திரும்ப விரும்பாத புலம்பெயரிகள் ஐநாவுக்கு கொடுத்த மேல்முறையீட்டு விண்ணப்பங்களில் நாட்டில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களும் உட்பட சில பிரமுகர்களின் பரிந்துரைகள் அடங்கிய கடிதங்களையும் இணைத்துக் கொடுத்ததாகத் தெரிகிறது. அதாவது அவர்கள் நாடு திரும்பினால் அவர்களுக்கு நாட்டில் பாதுகாப்பு இல்லை என்று அவர்கள் கூறும் காரணங்களை மேற்படி நாடாளுமன்ற உறுப்பினர்கள் உறுதிப்படுத்திக் கடிதம் கொடுத்திருந்தார்கள். ஆனால் ஐநாவோ அல்லது இதில் சம்பந்தப்பட்ட ஏனைய உலகப் பொது நிறுவனங்களோ அந்த கடிதங்களை பொருட்படுத்தவேயில்லை. அப்புலம்பெயரிகள் அனைவரையும் சட்டவிரோத குடியேறிகள் என்று ஐநா பார்க்கின்றது. அவர்கள் பொருளாதார காரணங்களுக்காக ஏஜென்ட்களுக்கு காசு கொடுத்து புலம்பெயர முற்பட்டவர்கள் என்று ஐநா கருதுகிறது. அதனால் அவர்களைத் திரும்பி அனுப்பும் நடவடிக்கைகள் படிப்படியாக முன்னெடுக்கப்படுகின்றன .

அதாவது ஐநா போன்ற உலகப் பொது அமைப்புக்களில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பரிந்துரைகளுக்கு உள்ள மதிப்பை இது காட்டுகிறது எனலாமா ? அல்லது புலம்பெயரிகளின் விடயத்தில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பரிந்துரைகளின் பின்னால் உள்ள அரசியலை ஐநா ஏற்றுக் கொள்ளவில்லையா? அதுதான் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உள்ள மதிப்பு என்றால், இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் எப்படி ஐநா உட்பட ஏனைய உலகப் பொது மன்றங்களிடம் தமிழ் மக்களுக்கான நீதிக்காகப் போராடப் போகிறார்கள்?

இதில், ஒரு விளக்கம் கூறப்படலாம். அரசற்ற தரப்பாகிய தமிழ் மக்களுக்கு அங்கீகாரம் இல்லை. அதனால் அத்தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை உலகப் பொது மன்றங்கள் அவ்வாறுதான் கையாளும் என்று. அப்படியென்றால் இந்த விளக்கத்தை ஒரு கதைக்காக ஏற்றுக் கொண்டால் அந்த அங்கீகாரத்தை பெறுவதற்காக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடந்த 13 ஆண்டுகளில் என்ன செய்திருக்கிறார்கள்?

உள்நாட்டில் சிங்கள பௌத்த மயமாக்களுக்கு எதிராகவும் நிலப்பறிப்புக்கு எதிராகவும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆங்காங்கே போராடி வருகிறார்கள். அதிலும் ஒவ்வொரு கட்சியும் தனித்தனியாகத்தான் போராடப் பார்க்கின்றது கூட்டாக சேர்ந்து போராட கட்சிகள் தயார் இல்லை. அதாவது கட்சிகளின் போராட்டந்தான். தேசத்தின் போராட்டம் அல்ல. அது போலவே அன்னை பூபதி நினைவு தினம் திலீபன் நினைவு தினம் போன்றவற்றிலும் கட்சிகள் எப்படி திலீபனையும் அன்னை பூபதியையும் தத்தெடுக்கலாம் என்று தான் சிந்திக்கின்றனவே தவிர, அதை ஒரு தேசிய அளவிலான நினைவு கூர்தலாகவோ, அல்லது மக்கள் மயப்பட்ட நினைவு கூர்தலாகவோ ஒழுங்கமைப்பதற்கு தயார் இல்லை. அதாவது தமிழ் மக்களை ஒப்பீட்டளவில் ஆகப் பெரிய திரட்சியாக திரட்டிக் காட்டினால்தான் உலக சமூகம் திரும்பிப் பார்க்கும். உதிரி உதிரியாகப் போராடி உலக சமூகத்தின் கவனத்தை ஈர்க்க முடியாது. சிவாஜிலிங்கத்தின் வீர தீரச் செயல்கள் அடுத்த நாள் பத்திரிகையில் செய்தியாக வரலாம். ஆனால் அது ஐநாவையோ அல்லது உலக நாடுகளின் தலைநகரங்களில் உள்ள முடிவெடுக்கும் அதிகாரத்தை பெற்ற கொள்கை வகுப்பாளர்களையோ தீண்டப் போவதில்லை.

தமிழ் மக்களுக்கு உலக சமூகத்தில் எத்தனை நாடுகள் நட்பாக உள்ளன? எத்தனை உலகப் பொது மன்றங்கள் தமிழ் மக்களின் பக்கம் நிற்கின்றன? கடந்த 13 ஆண்டுகளாக தமிழ் மக்கள் உலக அரங்கில் எத்தனை புதிய நண்பர்களை பெற்றிருக்கிறார்கள்? இந்த கேள்விக்கு தமிழ் கட்சிகள் பதில் கூறுமா? உள்ளூரில் தங்களுடைய அரசியல் எதிரிகளை நண்பர்களாக வென்றெடுக்க முடியாத இந்த கட்சிகள் வெளிச் சமூகத்தை எப்படி வென்றெடுக்க போகின்றன ?











இது தொடர்பாக தமிழ் கட்சிகளிடம் ஒரு பொருத்தமான வழி வரைபடம் உண்டா? இல்லை. இங்கு ஒரு முக்கிய உதாரணத்தைச் சுட்டிக் காட்ட வேண்டும். கடந்த 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மன்னாரைச் சேர்ந்த தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் ஐநாவுக்கு ஒரு கூட்டுக் கடிதத்தை எழுதும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. வவுனியா, கிளிநொச்சி ஆகிய இடங்களில் இடம்பெற்ற மூன்று சந்திப்புகளின் முடிவில் ஒரு கூட்டுக் கடிதம் ஜனவரி 21 ஆம் தேதி அனுப்பப்பட்டது. இந்தக் கடிதத்தில் தமிழ் கட்சிகள் இரண்டு பிரதான கோரிக்கைகளை முன் வைத்தன. முதலாவது கோரிக்கை, பொறுப்பு கூறலை ஐநா மனித உரிமைகள் பேரவையிலிருந்து எடுத்து ஐநா பொதுச் சபையிடம் கொடுத்து அதன் மூலம் உலக பொது நீதிமன்றங்களிடம் கையளிக்க வேண்டும் என்பதாகும். இரண்டாவது கோரிக்கை, சான்றுகளையும் சாட்சிகளையும் திரட்டுவதற்குரிய ஒரு பொறிமுறையை உருவாக்க வேண்டும். அதற்கு குறிப்பிட்ட காலவரையறையும் அறிவிக்கப்பட வேண்டும்.

இந்த இரண்டு கோரிக்கைகளையும் அதிகம் வலியுறுத்தியது தமிழ் தேசிய மக்கள் முன்னணிதான். தமிழ்க் கட்சிகளை ஒருங்கிணைக்கும் பொழுது இவ்வாறான கூர்மையான கோரிக்கைகளை முன் வைப்பது அக்கட்சி தான். ஆனால் அந்த கடிதம் அனுப்பப்பட்ட பின் என்ன நடந்தது? கடிதம் அனுப்பி கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. இதில் ஒரு விடயம் மட்டும் ஒப்பேறி இருக்கிறது. அதுவும் கூட அரைகுறைதான். அது என்னவெனில் சான்றுகளையும் சாட்சிகளையும் தொகுப்பதற்கான ஒரு அலுவலகம்.

ஆனால் அடுத்த விடயம், அதுதான் முக்கியமானது. பொறுப்புக் கூறலை ஐநா மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே கொண்டு போக முடியவில்லை. மட்டுமல்ல முன் சொன்ன சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான அலுவலகமும் ஐநா மனித உரிமைகள் பேரவையின் கட்டுப்பாட்டுக்குள்தான் இருக்கிறது. அதாவது தொகுத்துப் பார்த்தால் பொறுப்பு கூறலை மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே கொண்டு போக முடியவில்லை.

இந்த விடயத்தில் கடிதத்தில் கையெழுத்துப் போட்ட மூன்று கட்சிகளும் கடந்த 27 மாதங்களாக என்ன செய்து கொண்டிருக்கின்றன? குறிப்பாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி இந்த விடயத்தில் என்னென்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது? பொறுப்புக் கூறலை ஐநாவுக்கு வெளியே கொண்டு போவது என்பது ஒரு கோரிக்கை மட்டும் அல்ல. அது ஒரு வெளியுறவு நடவடிக்கை. அதற்காக உலக நாடுகளின் தலைநகரங்களில் லோபி செய்ய வேண்டும். அந்த கட்சியிடம் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான் உண்டு. அது ஒரு அடிப்படைப் பலவீனம். தமது மக்கள் மத்தியில் ஒப்பீட்டளவில் பலவீனமான பிரதிநிதித்துவத்தை கொண்டிருக்கும் ஒரு கட்சி, உலக அரங்கில் ஒப்பீட்டளவில் குறைந்த அளவு அங்கீகாரத்தையே கொண்டிருக்கும்.

இக்கட்டுரையின் தொடக்கத்தில் சுட்டிக் காட்டப்பட்டதுபோல, கனடாவுக்குப் போக எத்தனித்த தமிழ் குடியேறிகளின் விடயத்தில் தமிழ் கட்சிகளின் கடிதத்துக்கு எப்படிப்பட்ட மரியாதை இருந்தது என்று பார்த்தோம். அதாவது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கடிதங்களுக்கு உள்நாட்டில் மட்டுமல்ல வெளி உலகத்திலும் மதிப்பு இல்லை. இந்நிலையில் அந்த மதிப்பை எப்படி பெருக்கிக் கொள்வது? அந்த அங்கீகாரத்தை எப்படி பெறுவது? என்று சிந்தித்து அதற்காக உழைப்பதற்கு தமிழ் கட்சிகள் தயாரா? அவ்வாறு உழைக்க தயாரில்லை என்றால், குழந்தைக்கு சாப்பாடு கொடுக்கும்போது கண்ணாடியில் நிலவை காட்டும் அரசியலைச் செய்யக்கூடாது. அல்லது அந்த அரசியல் ஒரு வாக்கு வேட்டை அரசியல்தான் என்பதனை வெளிப்படையாகச் சொல்லும் துணிச்சலும் நேர்மையும் இருக்க வேண்டும். ●

> **தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கடிதங்களுக்கு உள்நாட்டில் மட்டுமல்ல வெளி உலகத்திலும் மதிப்பு இல்லை. இந்நிலையில் அந்த மதிப்பை எப்படி பெருக்கிக் கொள்வது? அந்த அங்கீகாரத்தை எப்படி பெறுவது? என்று சிந்தித்து அதற்காக உழைப்பதற்கு தமிழ் கட்சிகள் தயாரா?**

# நாட்டின் முக்கிய கட்சிகளின் மே தினக் கூட்டங்களின் விவரம்!

கொழும்பு, மே 01

சர்வதேச தொழிலாளர் தினம் இன்று திங்கட்கிழமை கொண்டாடப்படுகிறது. இதையொட்டி, நாட்டின் முன்னணி அரசியல் கட்சிகளால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மே தின கூட்டம், கொழும்பு மற்றும் கண்டி நகரங்களை மையமாகக் கொண்டு நடைபெறவுள்ளன.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் மே தின கூட்டம் பொரளை கெம்பல் மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று கட்சியின் பொதுச்செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டம் கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளதாக அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

இதனிடையே தமது மே தினக் கூட்டம் பிற்பகல் 2 மணிக்கு கண்டியில் நடைபெறவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

மேலவை இலங்கை கூட்டணியின் மே தினக்கூட்டம், பிற்பகல் 03 மணிக்கு கொழும்பு ஹைட்பார்க் மைதானத்தில் நடைபெறவுள்ளதாக அதன் தலைவர் விமல் வீரவன்ஸ கூறினார்.

மக்கள் விடுதலை முன்னணியின் மே தினக் கூட்டம் கொழும்பு விஹாரமகாதேவி பூங்காவில் நடைபெறவுள்ளது. கொழும்பு பி. ஆர். சி. மைதானத்திலிருந்து பிற்பகல் 03 மணிக்கு பேரணி ஆரம்பிக்கப்பட்டு, கொழும்பு விகாரமகா தேவி பூங்கா வரை பயணிக்கவுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

'நாட்டை விற்கும் மக்களை துன்புறுத்தும் ஊழல் மிக்க ஆட்சியை தோற்கடிப்போம், மக்கள் நேயமுள்ள ஆட்சியை கட்டியெழுப்புவோம்' எனும் தொனிப்பொருளில் மக்கள் விடுதலை முன்னணியின் மே தினக்கூட்டம் நடைபெறவுள்ளது.

சிறீ லங்கா சுதந்திர கட்சி, இம்முறை கண்டியில் தமது மே தினத்தை கொண்டாடவுள்ளது.

கண்டி பொதுச்சந்தை வளாகத்தில் மே தினக்கூட்டத்தை நடத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக கட்சியின் பொதுச்செயலாளர் திசர குணசிங்க கூறினார்.

முன்னிலை சோசலிசக் கட்சி நுகேகொடையில் மே தினக் கூட்டத்தை நடத்தவுள்ளது. தமது கட்சியின் மே தினப் பேரணி பிற்பகல் 01 மணிக்கு தெல்கந்த சந்தியில் ஆரம்பமாகவுள்ளதாக கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜாகொட குறிப்பிட்டார்.

இதேவேளை, கொழும்பு மற்றும் கண்டி நகரங்களை அண்மித்த பகுதிகளில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளை முன்னெடுத்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். (ஐ)

# சூடானிலிருந்து வெளியேற இலங்கையர்கள் மறுப்பாம்!

கொழும்பு, மே 01

சூடானில் உள்ள 18 இலங்கையர்கள் அங்கிருந்து வெளியேற மறுத்துள்ளனர் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அவர்கள் வேலையை இழக்க நேரிடும் என்று கூறி சூடானில் தங்க விருப்பம் தெரிவித்தனர் என்றும் வெளிவிவகார அமைச் சர் அலி சப்ரி தெரிவித்தார்.

இதுவரையில் சூடானில் இருந்து வெளியேற விருப்பம் தெரிவித்த 34 இலங்கையர்களை வெளியேற்றும் பணியை வெளிவிவகார அமைச்சு மேற்கொண்டுள்ளது.

இவர்களில் 14 பேர் நாட்டை வந்தடைந்துள்ளனர். மேலும் 6 பேர் சவூதி அரேபியாவின் ஜித்தாவை சென்றடைந்துள்ளனர் என்றும் வெளியுறவு அமைச்சர் சப்ரி குறிப்பிட்டார்.

மேலும் 14 இலங்கையர்கள் போர்ட் சூடானில் தங்கியுள்ளதாகவும், அவர்களை விரைவில் நாட்டுக்கு அழைத்துவர தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஐ)

# இறக்குமதியாகும் முட்டைகள் சில்லறை விற்பனைக்கு அனுமதி!

கொழும்பு, மே 01

இறக்குமதி செய்யப்படும் முட்டைகளை சில்லறை விற்பனை நிலையங்களில் விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்குவதற்கு கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் தீர்மானித்துள்ளது.

விவசாய அமைச்சர் மகிந்த அமரவீரவின் பணிப்புரைக்கு அமையவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. குறித்த நிறுவனங்களுடன் விவசாய அமைச்சில் இடம் பெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் இந்த ஆலோசனைகளை வழங்கி யுள்ளார்.

முட்டைக்கான அதிகபட்ச சில்லறை விலையை நீக்குவது குறித்து அமைச்சரவைக்கு அறிவிக்கவும் இதன்போது அமைச்சர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கோழிப்பண்ணை துறைக்கு தேவையான கோழிகளை இறக்குமதி செய்வதற்கு தனியார் துறைக்கு அனுமதி வழங்குமாறும் கால்நடை உற்பத்தி திணைக்களத்திற்கு அமைச்சரால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

# வேட்புமனு தாக்கல் செய்த அரச ஊழியர்க்கான அறிவித்தல்!

கொழும்பு, மே 01

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வேட்பாளர்களாக களமிறங்கிய அரச ஊழியர்களுக்கு அடிப்படை சம்பளம் கிடைக்காவிடில் அது தொடர்பில் தமது அமைச்சுக்கு தெரியப்படுத்துமாறு உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது.

தேர்தலில் போட்டியிட்ட அரச உத்தியோகத்தர்களுக்கு அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் அடிப்படை சம்பளம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும், அவை உரிய வகையில் வழங்கப்படவில்லை என தகவல் கிடைத்துள்ளது என்று இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

சம்பளம் கிடைக்காதவர்கள் முறையிடின் அது தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் இதன்போது குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# 3 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை!

கொழும்பு, மே 01

மாத்தளை, கேகாலை, பதுளை மாவட்டங்களின் பல பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில், மாத்தளை மாவட்டத்தின் லக்கலை, பல்லேகம மற்றும் பதுளை மாவட்டத்தின் ஹல்துமுல்ல, கேகாலை மாவட்டத்தின் கேகாலை பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கே இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.






# கல்வியியல் கல்லூரி ஆசிரியர்களுக்கு சொந்த இடங்களில் நியமனம் இல்லை!

## கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, மே 01

**கல்வியியல் கல்லூரிகளில் இருந்து வெளியேறும் தமிழ் மொழி மூல ஆசிரியர்களை நாடளாவிய ரீதியில் உள்ள தமிழ் பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிக்க வேண்டியுள்ளது என்று கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.**

இதனால், ஆசிரியர்களை அவர்களின் சொந்த மாவட்டங்களில் பணிக்கு நியமிப்பதில் சிக்கல்கள் காணப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

நேற்று மட்டக்களப்புக்கு வந்த இராஜாங்க அமைச்சர் களுவாஞ்சிக்குடியில் செய்தியாளர்களை சந்தித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

(ஐ)



# அரசு, ஆட்சி, அதிகாரம் நூல் அறிமுக நிகழ்வு!

மட்டக்களப்பு, மே 01

அருட்பணி மணி லூக் ஜோன் எழுதிய "அரசு, ஆட்சி, அதிகாரம்" நூல் அறிமுக விழா மட்டக்களப்பில் நடைபெற்றது.

கிழக்கு பல்கலைக்கழக கிறிஸ்தவ கற்கை நெறி முதுநிலை விரிவுரையாளர், அருட்தந்தை நவரத்தினம் அடிகளார் தலைமையில் நூல் அறிமுக விழா இடம்பெற்றது.

இந்த நூலானது, விடுதலை வேண்டி போராடிய ஓர் சமூகம் விடுதலை பெற்றதையும், இன்னும் ஒரு சமூகத்தை அடக்கி ஆட்சி செய்ததையும், இலங்கையில் 2020இல் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலின்போது சாதி மதம் சார் விடயங்கள் அதிகமாக பேசப்பட்டதையும், விடுதலைப் போராட்டத்தின் போது ஆட்சியாளர்கள் நடந்து கொண்ட விதத்தையும் இந்நூல் வெளிப்படுத்தி உள்ளது.




நூல் அறிமுக விழாவில் சர்வ மத தலைவர்கள், பொது நிலையினர் என பலர் கலந்து கொண்டனர்.

(ஐ)

# கோட்டைமுனை வி. க. பொன்விழா; விழிப்புணர்வு நடைபவனி நடந்தது




மட்டக்களப்பு, மே 01

கோட்டைமுனை விளையாட்டு கழகத்தின் 50ஆவது ஆண்டை சிறப்பிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட நடைபவனி நேற்று முன்தினம் பிள்ளையாரடி பகுதியில் ஆரம்பிக்கப்பட்டு, மட்டக்களப்பு நகர் காந்தி பூங்கா வரை முன்னெடுக்கப்பட்டது.

'சாலையில் வேண்டாம் கைபேசி குடும்பத்தையும் நீ யோசி' என்று சாரதிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வாசகம் அடங்கிய பதாகை விளம்பரப்படுத்தப்பட்டு நடைபவனி ஆரம்பிக்கப்பட்டது.

நடைபவனியின் முக்கிய நோக்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கி வரும் உதயம் விழிப்புணர்வு அற்றோர் சங்கத்துக்கும் ஓசானா விசேட தேவையுடைய நிலைய பிள்ளைகளுக்கும் ஹரி சிறுவர் இல்லத்திற்குமான ஒரு தொகை நிதி அன்பளிப்பு செய்யப்பட்டது.

கோட்டைமுனை விளையாட்டு கழகத்தின் 50 ஆவது ஆண்டினை சிறப்பிக்கும் வகையில் முன்னெடுக்கப்பட்ட நடைபவனியில் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், பயிற்றுநர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# மட்டக்களப்பில் டெங்கு நோய் பரவல் தீவிரம்!

மட்டக்களப்பு, மே 01

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த ஜனவரி தொடக்கம் இன்று வரை 765 டெங்கு நோயாளிகள் இனம் காணப்பட்டுள்ளனர். இதில் செங்கலடியைச் சேர்ந்த 22 வயது இளைஞன் மரணமானார்.

இதில், மட்டக்களப்பு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு மாவட்டத்தின் முதன்மை வகிக்கிறது. இப்பிரவில் 107 பேர் டெங்கு நோயாளிகளாக இனங்காணப்பட்டுள்ளனர். அதிலும், கொக்குவில் பிரதேசத்தில் ஒரே வீட்டில் நான்கு நோயாளிகள் இனம் காணப்பட்டுள்ளனர்.

வெட்டுக்காடு, இருதயபுரம் ஆகிய கிராமங்களிலும் மட்டக்களப்பு நகர மருத்துவ சுகாதார பிரிவில் 35 வீதமானவர்களும் இந்தப் பிரதேசங்களில் இனங்காணப்பட்டுள்ளனர். எனவே, இதனை அடுத்து மண்முனை வடக்கு பிரதேச செயலர் பிரிவில் சனிக்கிழமை காலை விசேட அதிரடி டெங்கு பரிசோதனை முன்னெடுக்கப்பட்டதாக மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஜி. சுகுணன் இவ்வாறு கருத்து தெரிவித்தார். (ஐ)

# நிந்தவூர் மீனாட்சி அம்பாள் பால்குட பவனி நடைபெற்றது



காரைதீவு, மே 01

நிந்தவூர் - மடத்தடி மீனாட்சி அம்பாள் ஆலயத்தின் முதலாவது வருடாந்த அலங்கார பால்குட பவனி நேற்று ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

ஆலயத்துக்கு மேற்கு புறமாக உள்ள சிவன் ஆலயத்தில் இருந்து பால்குட பவனி ஆரம்பமானது.

முன்னே ஆலய பரிபாலன சபை தலைவர் கி. ஜெயசிறில் பிரதான கும்பம் தாங்க, ஆலோசகர் வி. ரி. சகாதேவராஜா பிரதான மடை தாங்க ஆலய குரு சிவசிறீ ச. கோவர்த்தனசர்மா வழிகாட்டலில் பால்குடபவனி சிறப்பாக நடைபெற்றது.

எதிர்வரும் ஐந்தாம் திகதி சித்ரா பௌர்ணமி அன்று தீர்த்த உற்சவத்துடன் இந்த ஆலயத்தின் அலங்கார திருவிழா நிறைவடையும்.

(ஐ-10)

# நிலாவெளி விபத்தில் தந்தை, குழந்தை காயம்!

திருகோணமலை, மே 01

நிலாவெளி பிரதான வீதியின் ஏழாம் கட்டை பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்துக்கு உள்ளாகின. இதில், 3 வயது குழந்தை உட்பட நால்வர் காயமடைந்தனர்.

இந்த விபத்து சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றதாக நிலாவெளி பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விபத்தில் காயமடைந்த 3 வயது குழந்தை உட்பட நால்வர் காயமடைந்த நிலையில் நிலாவெளி பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேலதிக சிகிச்சைகளுக்காக 3 வயதான குழந்தையும், தந்தையும் திருகோணமலை பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (ஐ)

# 'திக்கெட்டும் சதிரே' நாட்டிய நிகழ்வு இன்று

மட்டக்களப்பு, மே 01

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சுவாமி விபுலானந்தர் நாட்டிய நிருத்தியாலய மாணவிகளின் "திக்கெட்டும் சதிரே" என்ற நாட்டிய சங்கமம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

சர்வதேச நடன தினத்தையொட்டி காரைதீவு விபுலானந்தா மணிமண்டபத்தில் பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், சீர்பெறு அதிதியாக கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தர் அழகிய கற்கைகள் நிறுவக பணிப்பாளர் கலாநிதி பாரதி புளோரன்ஸ் கென்னடி கலந்து கொள்ளவுள்ளனர்.

முதன்மை அதிதிகளாக கிழக்கு பல்கலைக்கழக அழகியல் கற்கைகள் நிறுவனத்தின் நடனநாடகத்துறை தலைவர் கலாநிதி தக்ஷாயினி பரமதேவன் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஷர்மிளா ரஞ்சிதகுமார் ஆகியோர் கலந்துகொள்வர்.

(ஐ-10)

# சீனாவுக்கு அமெரிக்கா கடுமையான எச்சரிக்கை

## தென்சீன கடல் விவகாரத்தில்

**வாஷிங்டன், மே 01**

**“பிலிப்பைன்ஸ் ஆயுதப் படைகள் மீதான எந்தவொரு தாக்குதலும் அமெரிக்காவை பதிலடிக்கு தூண்டும்”, என்று தென்சீனக் கடல் விவகாரத்தில் அமெரிக்கா சீனாவுக்கு கடுமையான எச்சரிக்கை விடுத்துள்ளது.**




இந்தப் பகுதியில் சீனா ஆதிக்கம் செலுத்த முயற்சி செய்து வருகிறது. சீனாவுக்கு எதிராக மலேசியா, பிலிப்பைன்ஸ், வியட்நாம் போன்ற நாடுகள் உள்ளன. இந்த விவகாரத்தில் சீனா-அமெரிக்கா இடையே பல ஆண்டுகளாக மோதல் போக்கு இருந்து வருகிறது. சீனாவுக்கு எதிராக உள்ள நாடுகளுக்கு அமெரிக்கா ஆதரவு அளித்து வருகிறது.

இதனிடையே தென் சீன கடல் பகுதியில் பிலிப்பைன்ஸ் எல்லை அருகே சீன கப்பல் ரோந்து பணியில் ஈடுபட்டது. அங்கு பிலிப்பைன்ஸ் கடற்படை கப்பலும் ரோந்து சென்றது. அப்போது 2 கப்பலும் மோதுவதுபோல் அருகருகே வந்தன. பிலிப்பைன்ஸ் கப்பல் பின்வாங்கியதால் மோதல் தவிர்க்கப்பட்டது. இது தென் சீன கடல் பகுதியில் பதற்றத்தை ஏற்படுத்தியது.

இந்த நிலையில் சீனாவுக்கு அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது. சர்ச்சைக்குரிய தென் சீன கடலில் ஆத்திரமூட்டும் மற்றும் பாதுகாப்பற்ற செயலை சீனா நிறுத்த வேண்டும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் மத்தியூ மில்லர் கூறுகையில்,

“சீனா, அதன் ஆத்திரமூட்டும் மற்றும் பாதுகாப்பற்ற நடத்தையில் இருந்து விலகுமாறு கேட்டுக் கொள்கிறோம். பிலிப்பைன்ஸ் ஆயுதப் படைகள் மீதான எந்தவொரு தாக்குதலும் அமெரிக்காவை பதிலடிக்கு தூண்டும் -என்றார்.

(ஐ)



நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் கருணைக் கொலை செய்யப்பட்ட கடல்சிங்கம் நினைவாக வெண்கல சிலை அமைக்கப்பட்டுள்ளது.

(ப்ரேயா என்ற பெயரால் அழைக்கப்பட்ட சுமார் 600 கிலோ எடைகொண்ட கடல் சிங்கம் கடலில் சிறுவர்களுக்கு ஆபத்தை விளைவிக்கிறது என்று கூறி கடந்த ஆண்டு கொல்லப்பட்டது. மக்கள் எதிர்ப்பின் மத்தியில் நோர்வே அரசு அதைக் கொன்றது என்பது குறிப்பிடத்தக்கது.)

# டெக்சாஸில் துப்பாக்கி சூடு; சிறுவன் உட்பட ஐவர் கொலை!

நியூயோர்க், மே 01

அயல் வீட்டுக்குள் துப்பாக்கியுடன் நுழைந்தவர் உறக்கத்திலிருந்து குடும்பத்தினர் மீது நடத்திய துப்பாக்கி சூட்டில் ஐவர் பலியாகினர்.

அமெரிக்காவின் - டெக்சாஸ் மாகாணத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நள்ளிரவு வேளை தனது வீட்டில் குறித்த நபர் துப்பாக்கி சூட்டை மேற்கொண்டிருந்தார். இதனை நிறுத்துமாறு கூறிவிட்டு அயல் வீட்டுக்காரர்கள் நித்திரைக்கு சென்றுள்ளனர்.

இதனால், ஆத்திரமடைந்தே குறித்த நபர் இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தை நடத்தியுள்ளார். இதனை செய்த பிரான் சிஸ்கோ ஒரெபேசா ( 38) தலைமறைவாகியுள்ளார். அவர் கைகளில் துப்பாக்கியை வைத்திருக்கலாம் என்றும் பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர்.

இந்தத் துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் 8 முதல் 31 வயதுடையவர்களே கொல்லப்பட்டனர். அந்த வீட்டில் 10 இருந்தனர். இவர்கள் ஹொன்டூரஸை சேர்ந்தவர்கள் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(ஐ)

# 550 குழந்தைகளுக்கு தந்தையானவர் விந்து தானம் செய்ய நீதிமன்று தடை!

ஆம்ஸ்ரர்டாம், மே 01

ஏறத்தாழ 550 முறை விந்து தானம் செய்த நபருக்கு, ‘இனி விந்து தானம் செய்யக் கூடாது’ என்று நெர்தர்லாந்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஜொனாதன் ஜேக்கப் மெய்ஜர் என்ற அந்த நபர், இந்த உத்தரவை மீறி மீண்டும் விந்து தானம் செய்ய முயன்றால், அவருக்கு ஒரு இலட்சம் யூரோ (இலங்கை மதிப்பில் சுமார் மூன்றரை கோடி ரூபாய்) அபராதம் விதிக்கப்படும் என்றும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

ஒரு தன்னார்வ அமைப்பும், ஜொனாதன் மூலம் குழந்தை பெற்ற தாய் ஒருவரும் ஹேக் நீதிமன்றத்தில் அவர் மீது தாக்கல் செய்த உரிமையியல் வழக்கு மூலம் வழியாக வெளியே வந்துள்ளது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி தனது தீர்ப்பில், “விந்து தானம் வழங்கியவர் தான் தானம் வழங்கப்போகும் பெற்றோர்களுக்கு தான் எத்தனை குழந்தைகளுக்கு அப்பா என்ற தகவலை தவறாக கொடுத்துள்ளார்.

தற்போது அந்த பெற்றோர்கள் அனைவரும் தங்களின் குழந்தைகள், நூற்றுக்கணக்கான சகோதர சகோதரிகள் கொண்ட ஓர் உறவு வலையமைப்பு கொண்ட குடும்பத்தில் அங்கத்தினராக உள்ளமை குறித்து கவலை அடைகின்றனர். இது அவர்களாக தெரிவு செய்தது இல்லை. இந்தத் தீர்ப்புக்குப் பின்னர், அந்த நபர் இனி யாருக்கும் விந்து தானம் செய்யக்கூடாது என்று இந்த நீதிமன்றம் தடை விதிக்கிறது. அவர் இனி விந்து தானம் செய்வது குறித்து யாரையும் தொடர்பு கொள்ளவோ, எந்த அமைப்புடன் சேர்ந்து விளம்பரம் செய்யவோ கூடாது” என்று உத்தரவிட்டார்.

நெதர்லாந்து சட்டத்தின்படி ஒருவர், 13 பெண்களுக்கு அதிகமாக அல்லது 25 குழந்தைகளுக்கு மேல் பெற தனது விந்தை தானம் செய்யக் கூடாது. இது தற்செயலாக நடக்கும் இனப்பெருக்க நிகழ்வுகளைத் தடுக்கவும், எதிர்காலத்தில் விந்து தானம் மூலம் பிறந்த குழந்தைகள் தங்களுக்கு நூற்றுக்கணக்கான சகோதர, சகோதரிகள் இருப்பதை அறிந்து உளவியல் ரீதியாக பாதிப்படையாமல் இருக்கவும் உதவுகிறது.

ஜொனாதன் கடந்த 2007 ஆம் ஆண்டு முதல் இதுவரை 550இல் இருந்து 600 முறை விந்து தானம் செய்துள்ளார். கடந்த 2017ஆம் ஆண்டு அவர் நெதர்லாந்தில் உள்ள கருவுறுதல் மருத்துவமனைகளுக்கு விந்து தானம் செய்ய தடை விதிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அவர் ஒன்லைன் மூலமாக வெளிநாடுகளுக்கு தனது சேவையை தொடர்ந்த நிலையிலேயே நீதிமன்றம் இந்தத் தடையை விதித்துள்ளது.

எனினும், வழக்கு விசாரணையின்போது கருத்தரிக்க முடியாத பெற்றேர்களுக்கு ஜொனாதன் உதவ விரும்புவதாக தெரிவித்துள்ளார். இசைக் கலைஞரான அவர் தற்போது கென்யாவில் வசித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# யுவதிகளின் சடலங்களையும் விட்டு வைக்காத காமுகர்கள்!

## மகள்களின் கல்லறைகளுக்கும் பூட்டுபோடும் பாகிஸ்தானியர்கள்!

இஸ்லாமாபாத், மே 01

மயானங்களில் அடக்கம் செய்யப்பட்ட இளம்பெண்க ளின் உடலை தோண்டியெடுத்து புணர்வில் ஈடுபடும் சம்பவங்கள் பாகிஸ்தானில் அதிகரித்துள்ளது. இதையடுத்து, பெற்றோர் தங்கள் மகள்கள் அடக்கம் செய்யப்பட்ட கல்லறைகளில் பூட்டு போட்டு பாதுகாக்கத் தொடங்கியுள்ளனர்.



சமூக ஊடங்களில் இந்த விவகாரத்தை பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர். இவ்வாறு பூட்டுப் போடப்பட்டு பாதுகாக்கப்படும் கல்லறைகளின் ஒளிப்படங்களும் பகிரப்படுகின்றன.

பாகிஸ்தானின் நாத்திக ஆர்வலராக அறியப்பட்ட “கடவுளின் சாபம், நான் ஏன் இஸ்லாத்தை விட்டு வெளியேறினேன்” என்ற புத்தகத்தின் ஆசிரியருமான ஹாரிஸ் சுல்தான், இத்தகைய மோசமான செயல்களுக்கு கடுமையான இஸ்லாமிய சித்தாந்தத்தை குற்றம் சாட்டியுள்ளார்.

“பாகிஸ்தான் அத்தகைய பாலியல் விரக்தியுள்ள சமூகத்தை உருவாக்கியுள்ளது. மக்கள் இப்போது தங்கள் மகள்களின் சடலங்கள் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்படுவதை தடுக்க அவர்களின் கல்லறைகளில் பூட்டுகளை வைக்கின்றனர். நீங்கள் புர்காவை பாலியல் வல்லுறவுடன் இணைக்கும்போது, அது உங்களை கல்லறைக்கு பின்தொடர்கிறது” என்று சுல்தான் புதன்கிழமை ருவிற் செய்துள்ளார்.

பாகிஸ்தானில் அடக்கம் செய்யப்பட்ட இளம் பெண்களின் உடல்கள் தோண்டியெடுக்கப்பட்டு புணரும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதையடுத்து, இறந்த உடல்களின் புனிதத்தை உறுதி செய்வதற்கான முயற்சியாக பெற்றோர் கல்லறைக்கு பூட்டு போடுகிறார்கள்.

கராச்சியை சேர்ந்த முஹமது றிஸ்வான் என்ற கல்லறை காவலர் பெண் சடலத்துடன் புணர்ந்ததை ஏற்றார். இதையடுத்து அவருக்கு எதிராக 2011இல் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

கடந்த ஆண்டு மே மாதம் குஜராத்தில் (பாகிஸ்தான்) சிலர் யுவதியின் சடலத்தை தோண்டி எடுத்து புணர்ந்துள்ளனர். அவரின் உடலம் அடக்கம் செய்யப்பட்ட அன்று மாலை இது நடந்தது. அண்மையில் 18 வயது பெண்ணின் உடலமும் வீதியில் கிடந்தது. இந்த சடலத்துடனும் புணரப்பட்டமைக்கான ஆதாரங்கள் வெளிப்பட்டுள்ளன.

இதேவேளை, மனித உரிமைகளுக்கான தேசிய ஆணையத்தின் கூற்றுப்படி, 40 வீதத்துக்கும் அதிகமான பாகிஸ்தானிய பெண்கள் தங்கள் வாழ்நாளில் ஒருமுறையாவது வன்முறையை அனுபவித்திருக்கிறார்கள்.

ஈழநாடு





# நியூசிலாந்துடனான ஒருநாள் பாகிஸ்தான் அநாயச வெற்றி!

ராவல்பிண்டி, மே 01

ராவல்பிண்டியில் நடைபெற்ற 2ஆவது ஒருநாள் போட்டியில் நியூசிலாந்து அணி நிர்ணயித்த 336 ஓட்டங்கள் இலக்கை பாகிஸ்தான் அணி அநாயசமாக விரட்டி 337/3 என்று மிகப்பெரிய வெற்றியைப் பெற்றது.

இது பாகிஸ்தான் அணியின் 2ஆவது பெரிய வெற்றிகர பின்தொடர்ச்சியாகும். நியூசிலாந்து அணி எடுத்த 336 ஓட்டங்கள் பாகிஸ்தான் மண்ணில் அந்த அணியின் அதிகபட்ச ஓட்டமாகும்.

நியூசிலாந்தின் டேரல் மிட்செல் 119 பந்துகளில் 8 பௌண்ட்ரிகள் 3 சிக்ஸர்கள் விளாசி 129 ஓட்டங்கள் எடுத்தார். கேப்டன் டாம் லேதம் 85 பந்துகளில் 8 பௌண்ட்ரி, ஒரு சிக்ஸருடன் 98 ஓட்டங்களை விளாசினார். சாத் போவ்ஸ் என்ற தொடக்க வீரர் 51 பந்துகளில் 51 ஓட்டங்கள் எடுத்தார்.

45.3 ஓவர்கள் வரை நின்ற டெரில் மிட்செல் முதலில் 53 பந்துகளில் 50 ஓட்டங்களை எடுத்தார்.

பிறகு 102 பந்துகளில் சதம் கண்டார். அடுத்த 17 பந்துகளில் 27 ஓட்டங்கள் எடுத்தாலும் அவர் கொஞ்சம் முன்னமேயே அடித்திருக்க வேண்டும் என்றே தோன்றுகின்றது.

ஏனெனில், அதிரடி மன்னன் மார்க் சாப்மேனுக்கு இதனால் ஓவர்கள் இல்லாமல் போனதால் 360-375 ரக சமதள ஆடுகளத்தில் 336 ஓட்டங்கள் போதாமலாகி விட்டது. அதோடு இஷ் சோதி 10 ஓவர்களில் 7 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களுடன் 79 ஓட்டங்களை விட்டுக்கொடுத்ததும் பாகிஸ்தான் வெற்றிக்கு சாதகமாக அமைந்தது. ரச்சின் ரவீந்திரா தன் பங்குக்கு 10 ஓவர்களில் 75 ஓட்டங்கள் கொடுத்தார்.

பாகிஸ்தான் அணியில் ஃபகர் ஷமான் 144 பந்துகளில் 17 பௌண்ட்ரிகள் 6 சிக்ஸர்களுடன் 180 ஓட்டங்கள் எடுத்து இறுதி வரை ஆட்டமிழக்காமல் திகழ்ந்தார், அணித் தலைவர் பாபர் அசாம் 65 ஓட்டங்களையும், முகமது ரிஸ்வான் 41 பந்துகளில் 54 ஓட்டங்களையும் விளாசினர்.

பாபர் அசாமுடன், பகர் ஷஜமான் சேர்ந்து எடுத்த 135 ஓட்டங்கள் இணைப்பாட்டம்தான் துரத்தலை வலுப்படுத்தியது. பிறகு ரிஸ்வானின் இன்னிங்ஸ் நியூசிலாந்தின் கையிலிருந்து ஆட்டத்தைப் பறித்துச் சென்றது. நியூசிலாந்து அணி முதல் 16 ஓவர்களில் 100 பிறகு 33.3 ஓவர்களில் 200 என்று ஓட்ட வீதத்தை உயர்த்த வேண்டிய தருணத்தில் உயர்த்தாமல் ஆடியதுதான் தோல்விக்குக் காரணம். அடுத்த 17 ஓவர்களில் 136 ஓட்டங்களை விளாசியும் பயனில்லாமல் போனது. கடைசி 3 ஓவர்களை பாகிஸ்தான் பந்துவீச்சாளர்கள் வீசியதும் நியூசிலாந்து மட்டுப்பட்டதற்குக் காரணமாக அமைந்தது.

பாகிஸ்தான் அணி இன்னிங்ஸை அபாரமாக தொடங்கியது. ஓவருக்கு 7 ஓட்டங்கள் என்று வந்து கொண்டு இருந்தது. பாபர் அசாம் இறங்கியவுடன் வழக்கம் போல் திணறினார். அப்போதே அவரை கழற்ற முயற்சி செய்திருக்க வேண்டும். முதல் 25 பந்துகளில் 16 ஓட்டங்களை மட்டுமே எடுத்தார்.

டெரில் மிட்செல் போல் மந்தம் காட்டாமல் பகர் ஷமான் விரைவு கதியில் அதிரடி முறைக்கு வந்தார், இஷ் சோதி வந்தவுடன் ஒரே ஓவரில் 17 ஓட்டங்களை விளாசினார். 83 பந்துகளில் தன் சதத்தை எடுத்தார். மறுமுனையில் பாபர் அசாம் மெதுவான ஆட்டத்தின் பின் விளையாடி அரைச்சதம் கண்டார். சோதியின் பந்தில் ஒரு சிக்ஸ், ஒரு பௌண்ட்ரி அடித்த பாபர் அசாம் பிறகு வெளியேறினார்.

அப்துல்லா ஷஃபீக்கை ஷிப்லி வீழ்த்த நியூசிலாந்துக்கு சிறிது கனவு இருந்தது. ஆனால் ரிஸவான் அந்த நம்பிக்கையை தன் அதிரடியால் சிதறடித்தார். ஆட்ட நாயகனாக பகர் ஷமான் தேர்வு செய்யப்பட்டார். 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் பாகிஸ்தான் 2-0 என்று முன்னிலை வகிக்கின்றது. (ஐ)

# சங்கர், மில்லர் அதிரடி குஜராத் இலகு வெற்றி!

கொல்கத்தா, மே 01

ஐ. பி. எல். இருபது - 20 கிரிக்கெட் தொடரில் கொல்கத்தா நைற்ரைடர்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் விஜய் சங்கர், டேவிட் மில்லர் ஆகியோரின் அதிரடியால் 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது குஜராத் ரைட்டன்ஸ் அணி. இந்த வெற்றியின் மூலம் புள்ளிகள் பட்டியலில் முதலிடத்துக்கு முன்னேறியது குஜராத் அணி.



கொல்கத்தா ஈடன் கார்டனில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைற்ரைடர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 179 ஓட்டங்கள் குவித்தது.

அதிகபட்சமாக தொடக்க வீரரான குர்பாஸ் 39 பந்துகளில், 7 சிக்ஸர்கள், 5 பௌண்ட்ரிகளுடன் 81 ஓட்டங்கள் விளாசினார். மற்றொரு தொடக்க வீரரான நாராயண் ஜெகதீசன் 19, ஷர்துல் தாகூர் 0, வெங்கடேஷ் ஐயர் 11, அணித் தலைவர் நிதிஷ் ராணா 4, ரிங்கு சிங் 19 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். இறுதிக்கட்டத்தில் அதிரடியாக விளையாடிய அன்ட்ரே ரஸல் 19 பந்துகளில், 3 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகளுடன் 34 ஓட்டங்கள் விளாசினார். டேவிட் வைஸ் 8 ஓட்டங்கள் சேர்த்தார்.

குஜராத் அணி சார்பில் மொகமது ஷமி 3 விக்கெட்களையும் ஜோஷ்வா லிட்டில், நூர் அகமது ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். தனது 100ஆவது ஆட்டத்தில் களமிறங்கிய ரஷித் கான் 4 ஓவர்களை வீசி 54 ஓட்டங்களை வாரி வழங்கி, விக்கெட் ஏதும் கைப்பற்றாமல் ஏமாற்றம் அளித்தார்.

180 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய குஜராத் அணி ஒரு கட்டத்தில் 12 ஓவர்களில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 98 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ஷுப்மன் கில் 35 பந்துகளில், 8 பௌண்ட்ரிகளுடன் 49 ஓட்டங்கள் சேர்த்து சுனில் நரேன் பந்தில் ஆட்டமிழந்தார். ரித்திமன் சஹா 10, அணித் தலைவர் ஹார்திக் பாண்ட்யா 26 ஓட்டங்களில் வெளியேறினர்.

வெற்றிக்கு கடைசி 8 ஓவர்களில் 82 ஓட்டங்கள் தேவையாக இருந்த நிலையில் விஜய் சங்கர் 24 பந்துகளில், 5 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகளுடன் 51 ஓட்டங்களும், டேவிட் மில்லர் 18 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகளுடன் 32 ஓட்டங்களும் விளாச குஜராத் அணி 17.5 ஓவர்களில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 180 ஓட்டங்கள் எடுத்து 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

குஜராத் அணிக்கு இது 6ஆவது வெற்றியாக அமைந்தது. 8 போட்டிகளில் விளையாடி உள்ள அந்த அணி 12 புள்ளிகளுடன் முதலிடத்துக்கு முன்னேறியது. அதேவேளையில் கொல்கத்தா அணிக்கு 6ஆவது தோல்வியாக அமைந்தது. 9 போட்டிகளில் விளையாடியுள்ள கொல்கத்தா 3 வெற்றிகளுடன் 7ஆவது இடத்தில் உள்ளது.

# டில்லியை 9 ஓட்டங்களால் வீழ்த்தியது ஹைதராபாத்

புதுடில்லி, மே 01

நடப்பு ஐ. பி. எல் தொடரின் 40ஆவது போட்டியில் டில்லி கப்பிட்டல்ஸ் அணியை 9 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி.

198 ஓட்டங்கள் என்ற இலக்கை விரட்டிய டில்லி அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்பிற்கு 188 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

டில்லிக்கு டேவிட் வோர்ணர் மற்றும் பிலிப் சால்ட் இன்னிங்ஸை தொடங்கினர். புவனேஷ்வர் குமார் வீசிய முதல் ஓவரில் ஓட்டம் ஏதும் எடுக்காமல் வெளியேறினார் வோர்ணர். அதன்பின்னர், துடுப்பெடுத்தாட வந்த மிட்செல் மார்ஷ், சால்ட் உடன் இணைந்து 112 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தார்.

அவர்கள் இருவரும் இன்னிங்ஸை அணுகிய விதம் டில்லி அணி மிக விரைவாக இலக்கை எட்டும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. சால்ட், 35 பந்துகளில் 59 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார். மனிஷ் பாண்டே, ஓர் ஓட்டம் எடுத்து வெளியேறினார். மார்ஷ், 39 பந்துகளில் 63 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார். ஒரு பௌண்ட்ரி மற்றும் 6 சிக்ஸர்களை அவர் விளாசி இருந்தார்.

அதன் பின்னர் பிரியம் கார்க் மற்றும் சர்ஃபராஸ் கான் ஆகியோர் தங்கள் விக்கெட்டை இழந்தனர். ஹைதராபாத் அணிக்காக இறுதி ஓவர்களை வீசிய புவனேஷ்வர் மற்றும் நடராஜன் சிறப்பாக பந்து வீசினர். இதன் காரணமாக 14 பந்துகளில் 29 ஓட்டங்கள் டில்லி வீரரான அக்சர் பட்டேலால் எடுக்க முடிந்தது. இந்தப் போட்டியில் ஆட்ட நாயகன் விருதை மார்ஷ் பெற்றார். முதல் இன்னிங்ஸில் 4 விக்கெட்களை அவர் கைப்பற்றி இருந்தார்.

முன்னதாக ஆடிய சன்ரைசர்ஸ் அணிக்கு மயங்க் அகர்வால் 5 ஓட்டங்களிலும், ராகுல் திரிபாதி 10 ஓட்டங்களிலும், அய்டன் மார்கம் 8, ஹாரி ப்ரூக் 0 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

இருந்தாலும் மறுபுறம் தனியொரு ஆளாக நின்று அபிஷேக் ஷர்மா, வந்ததும் கிளம்பும் தன் அணி துடுப்பாட்ட வீரர்களை வேடிக்கை பார்த்துக்கொண்டே 36 பந்துகளில் 67 ஓட்டங்களை குவித்தார்.

அவரும் ஆட்டமிழக்க 12 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்த அந்த அணி 109 ஓட்டங்களை சேர்த்தது. அபிஷேக் ஷர்மாவுக்குப்பிறகு, ஹென்ரிச் கிளாசென் 27 பந்துகளில் 53 ஓட்டங்களை விளாச நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர் முடிவில் 6 விக்கெட்களைப் பறிகொடுத்த ஹைதராபாத் 197 ரன்களை குவித்தது. (ஐ)



# ரயில் சேவையை தனியார் மயப்படுத்த அரசு திட்டம்!

## புகையிரத நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கம்

கொழும்பு, மே 01

ரயில் சேவையை தனியார்மயப்படுத்த அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது. புகையிரத திணைக்களத்தை அதிகார சபையாக மாற்றியமைப்பதன் நோக்கம் முறையற்றது என்று புகையிரத நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன தெரிவித்துள்ளார்.

ரயில் சேவையில் நிலவும் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காணவேண்டுமாயின், புகையிரத திணைக்களத்தை அதிகார சபையாக மாற்றியமைக்க வேண்டும். அதற்கான சட்ட திருத்தத்தை முன்வைக்க எதிர்பார்த்துள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன கடந்த வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றியுள்ளார்.

புகையிரத தொழில்சங்கங்களின் பிரதானிகளுக்கும், போக்குவரத்து அமைச்சருக்கும், புகையிரத திணைக்கள பொது முகாமையாளருக்கும் இடையில் கடந்த வாரம் இடம்பெற்ற பேச்சிலும் இதனையே கூறினார்.

ரயில் சேவை என்பது மக்களுக்கான பொதுப் போக்குவரத்து சேவை. ஆகவே, இலாபத்தை எதிர்பார்க்க முடியாது என்பதை போக்குவரத்து அமைச்சர் குறிப்பிட்டார். ரயில் சேவையை அதிகார சபையாக மாற்றினால் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும் என்ற நிலைப்பாட்டில் அமைச்சர் உள்ளார். ரயில் சேவையில் நிலவும் அடிப்படை பிரச்சினைகளுக்கு திணைக்கள மட்டத்தில் தீர்வு காண முடியும். ஆனால், இதுவரை தீர்வு காண்பதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

ரயில்கள் தற்போது அடிக்கடி தடம் புரள்கிறது. பயணிகள் ரயிலுக்காக காத்துக்கொண்டிருக்கும்போது ரயில் சேவைகள் இரத்து செய்யப்படுகின்றன. ரயில் சேவை தொடர்பில் மக்கள் மத்தியில் வெறுப்பை தோற்றுவித்து மக்களின் விருப்பத்துடன் ரயில் சேவையை தனியார்மயப்படுத்த அரசாங்கம் விசேட அவதானம் செலுத்தியுள்ளது. புகையிரத திணைக்களத்தை அதிகார சபையாக மாற்றியமைக்கும் நோக்கம் முறையற்றது - என்றும் அவர் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார். (ஐ)

# எம். பியின் கொலைக்காக மன்னிப்பு கேட்ட அமைச்சர்!



கொழும்பு, மே 01

பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள படுகொலை செய்யப்பட்டமைக்காக கம்பஹா பிரஜை என்ற வகையில் பொலநறுவை மக்களிடம் மன்னிப்பு கோருகிறேன் என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

போராளிகள் என்று அழைக்கப்படுபவர்கள் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக மக்களைக் கொல்லவும் வீடுகளை எரிக்கவும் விரும்பினர் என்றும் அமைச்சர் கூறினார்.

போராட்டம் என்ற பெயரில் கொலைகள், சொத்துகள் எரிப்பு, தாக்குதல் போன்ற சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் மற்றும் அதற்கு ஆதரவாக செயல்பட்ட அனைவருக்கும் எதிராக சட்டத்தை கடுமையாக அமுல்படுத்த வேண்டும் என்றும் அமைச்சர் கூறினார்.

பொலநறுவை நடைபெற்ற நிகழ்வு ஒன்றிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

# தாக்குதல் நடத்திய சிப்பாய் கைதானார்

கொழும்பு, மே 01

வீடு ஒன்றுக்குள் புகுந்து இருவரை இரும்புக் கம்பியால் தாக்கிப் படுகாயப்படுத்தினர் என்ற குற்றச்சாட்டில் சிப்பாய் ஒருவரும் அவரின் சகோதரரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரி - மொரகஹேன நாகல கந்த பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றுள்ளது.

சந்தேக நபர்களை கைது செய்த பொலிஸார் தாக்குதலுக்கு பயன்படுத்திய வாள் மற்றும் இரும்புக் கம்பி என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

# பாவனைக்குதவாத ரின்மீன்களை விற்கும்படி சதொசவுக்கு உத்தரவு

## முன்னாள் இயக்குநர் குற்றச்சாட்டு



கொழும்பு, மே 01

2021இல் பாவனைக்குதவாத ரின்மீன்களை விற்பனை செய்யும்படி சதொசவுக்கு வர்த்தக அமைச்சு வேண்டுகோள் விடுத்தது என நுகர்வோர் அதிகார சபையின் முன்னாள் நிறைவேற்று இயக்குநர் துசான் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

2021 ஜூலையில் சதொசவிற்கு வர்த்தக அமைச்சு அனுப்பிய இது குறித்த மின்னஞ்சல்களை அவர் வெளியிட்டுள்ளார்.

துறைமுக அதிகார சபை தடை செய்த ரின்மீன்களை விற்பனை செய்யுமாறு வர்த்தக அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

துறைமுக அதிகார சபை தடைசெய்துள்ள ரின்மீன்களை சதொச மூலம் விற்பனை செய்வதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது என துசான் குணவர்த்தன வெளியிட்டுள்ள ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாவனைக்குதவாத ரின்மீன்கள் என அறிவிக்கப்பட்டவற்றை எவ்வாறு விற்பனை செய்தது என கேள்வி எழுப்பியுள்ள துசான், இலங்கை நுகர்வோர் அதிகார சபை இதனை தடுக்க முயன்றது ஆனால் வர்த்தக அமைச்சு விற்பனையை தொடர விரும்பியது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இது அரசாங்கத்தின் ஆதரவுடனான படுகொலை சதொசவில் தரம் குறைந்த பொருட்களே அதிகளவில் காணப்படுகின்றன என்று நுகர்வோர் அதிகார சபையின் முன்னாள் தலைவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# கைதியிடமிருந்து ஐஸ் போதை கைப்பற்றல்!

கொழும்பு, மே 01

கசிப்பு வைத்திருந்த வழக்கில் குற்றவாளி என சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட நிலையில் அகுணுகொலபலஸ்ஸ சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்ட கைதி ஒருவரிடமிருந்து 7 கிராம் ஐஸ் போதைப்பொருள் கண்டு பிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கசிப்பு வைத்திருந்தமைக்காக இந்த நபருக்கு அகுணுகொலபலஸ்ஸ நீதிவான் நீதிமன்றம் 5,000 ரூபாய் அபராதம் விதித்தது. இருப்பினும், அபராதத் தொகையை செலுத்தாததால் அவருக்கு ஆறு மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்நிலையில், சிறைக்கு அழைத்து வரப்பட்ட கைதியை சிறையில் அடைக்கும் முன்னர் சிறை அதிகாரிகள் அவரிடம் மேற்கொண்ட சோதனையின் போது, அவரது உள்ளாடையில் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த ஐஸ் போதைப்பொருளை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர். (ஐ)

# தனிமையில் இருந்த பெண்ணை கொன்ற முன்னாள் சிப்பாய் கைது!

கொழும்பு, மே 01

தனிமையில் இருந்த மாற்றுத் திறனாளியான பெண்ணை கொலை செய்தார் என்று கூறப்படும் முன்னாள் சிப்பாய் ஒருவரை கைது செய்யப்பட்டுள்ளார் என்று அநுராதபுரம் - மிகிந்தலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர் பல வருடங்களாக இராணுவத்தில் பணியாற்றி தலைமறைவானவர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மிகிந்தலை, டொரமடலாவையை சேர்ந்த வசிக்கும் சிறியானி விஜயசிங்க (வயது49) என்ற மாற்றுத்திறனாளியான திருமணமாகாத பெண்ணே இவ்வாறு கொலையானார். (ஐ)

# வன்புணர்வின் பின்னர் 51 வயது பெண் கொலை!

கொழும்பு, மே 01

வீட்டில் தனிமையில் இருந்த 51 வயதான பெண்ணை வன்புணர்வுக்கு உட்படுத்திய பின்னர் படுகொலை செய்தார் என்ற குற்றச்சாட்டின்கீழ் 47 வயதான ஒருவர் கைது செய்யப்பட்டார்.

மிகிந்தலை பகுதியிலுள்ள வீடொன்றில் இடம் பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

அந்தப் பெண் தனது தாயாருடன் வீட்டில் வாழ்ந்து வந்துள்ளார். தாய் அருகில் உள்ள வீட்டுக்கு வேலைக்கு சென்றிருந்தார். இந்நிலையில், அருகில் உள்ள கிராமத்தில் வசிக்கும் நபரொருவர் வீட்டுக்கு வந்து பெண்ணை வன்புணர்வுக்கு உட்படுத்திய பின்னர், அவரைக் கொலை செய்தார்.

இந்தச் சம்பவத்தில் 47 வயதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

# தகுதியிருந்தும் பல மாணவர்கள் பல்கலை. வாய்ப்பை இழக்கின்றனர்!

கொழும்பு, மே 01

பல்கலைகழகங்களில் உயர் கல்வியை பெறுவதற்கான தகுதியிருந்தும் பல மாணவர்கள் அரச பல்கலைக்கழங்களுக்கு செல்லும் வாய்ப்பை இழந்து வருகின்றனர் என்று பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, தனியார் பல்கலைக் கழகங்களின் ஊடாக உயர் கல்வியைப் பெறுவதற்கான சந்தர்ப்பம் குறித்த மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். இலங்கையில் தனியார் பல்கலைக்கழகங்களை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகள் போதுமான அளவில் மேற்கொள்ளப்படவில்லை -என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையில் உயர்தரம் கற்பிக்கின்ற பெரும்பாலான பாடசாலைகளில் விஞ்ஞான பாடங்களுக்கான ஆசிரியர்கள் பற்றாக்குறை உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஐந்து ஆண்டுகால விடுமுறை 2,000 அரச ஊழியர்கள் பெற்றனர்!

கொழும்பு, மே 01

சுமார் 2,000 அரச பணியாளர்கள், வேலைவாய்ப்புக்காக வெளிநாடு செல்வதற்காக ஐந்து வருட விடுமுறையை தெரிவு செய்துள்ளனர்.

பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்கவும் அரசின் செலவினங்களைக் குறைக்கவும் இந்த நடைமுறையை அரசு கடந்த ஆண்டு அறிமுகப்படுத்தியது.

இதன்படி அரச பணியாளர்கள், ஊதியமில்லாத விடுப்பில் வெளிநாட்டில் பணிபுரியவோ, தொழில் பயிற்சி பெறவோ அல்லது அவர்களின் மொழி மற்றும் தகவல் தொழில்நுட்பத் திறனை மேம்படுத்தவோ பயன்படுத்த அனுமதிக்கப்படுகின்றனர்.

இந்த சுற்றறிக்கை அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்து, மொத்தம் 1988 அரச பணியாளர்கள் ஏற்கனவே வெளிநாட்டு வேலைவாய்ப்பை தொடர அனுமதி பெற்றுள்ளனர் என்று பொது நிர்வாக அமைச்சகம் வெளியிட்டுள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தநிலையில் குறித்த விடுப்பு காலம், பணி மூப்பு மற்றும் ஓய்வூதியத்தை கணக்கிடுவதற்கான பணிக்காலமாக கணக்கிடப்படும். எனினும், இந்த விதி, தங்கள் பதவியில் உறுதிப்படுத்தப்படாத நிர்வாகதர அதிகாரிகளுக்கு பொருந்தாது என்று அமைச்சக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்த அரச பணியாளர்கள் தங்களின் சொந்த பெயரில் திறக்கப்பட்ட ஒரு வெளிநாட்டு நாணயக் கணக்குக்கு பணத்தை அனுப்ப வேண்டும் என்ற விதி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. (ஐ)

## தேசமாக...

போதே மாவட்ட அபிவிருத்தி சபை கூட்டங்களிலும் பிரதேச அபிவிருத்தி சபைக்கூட்டங்களிலும் இந்த சட்ட விரோத செயல்பாடுகளை வெளிப்படுத்தி இது உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என கோரப்பட்டது. ஆனால், இந்த விடயம் தொடர்பாக இன்னுமொரு விசேட கூட்டம் கூட்டப்படும் என வாக்குறுதி அளித்திருந்தும் எந்தக் கூட்டமும் இல்லாமல் - நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இராணுவத்தினரின் முழுப்பங்களிப்போடு விகாரை கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

“தையிட்டியில் மட்டுமல்ல இன்று தமிழர் தாயக நிலப்பகுதி முழுவதிலும் சிங்களமயமாக்கல் வேலைத்திட்டத்திட்டமானது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. நாங்கள் இந்த விடயத்தை ஐ. நா. மட்டிலும் பதிவு செய்திருக்கிறோம். ஆகவே, எங்களைப் பொறுத்தவரையில் மக்கள் மட்டத்தில் இந்த நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட வேண்டிய கட்டாயம் இருக்கிறது.

இன்று இந்தப் பகுதியிலுள்ள மக்களின் தொண்டைகளில் கைவைத்த நிலையில்தான் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவ்வாறான நிலைமைக்குள்ளும் மக்கள் எங்களை அழைத்து இந்த விகாரை சம்பந்தமான பிரச்னைகளை வெளிப்படுத்தி இருந்தார்கள். எங்களைப் பொறுத்த வரையில் இந்த மாதிரியான சட்டவிரோத - இனவாத போக்குக்கு ஒரு தேசமாக நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்காத வரைக்கும் எங்களுடைய நிலங்கள் பறிபோய்க் கொண்டே இருக்கும்.

நாங்கள் இவ்வாறான நடவடிக்கைகளுக்கெதிராக எங்களுடைய முழு எதிர்ப்பையும் வெளிப்படுத்துவோம். எங்களுடைய எதிர்ப்புக்களைத் தாண்டியே இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்ற நிலையை நாம் உருவாக்க வேண்டும் - என்றார். (ஐ)

## இராணுவ...

னகே, சனத் நிஷாந்த, காமினி லோககே, டி. வீரசிங்க, டி.பி. ஹேரத், ஜயந்த கட்டகொட உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் இராஜாங்க அமைச்சர்கள் பலரும் இந்தக் குற்றச்சாட்டுகளை சுமத்தினர் என்றும் தெரிய வருகின்றது.

உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்பட்ட பின்னர் மாநகர சபை ஆணையாளர் நியமனத்தில் ஆளுநர் ஒருவர் செயல்பட்ட விதம், அரச உத்தியோகத்தர்களை முக்கிய அரசாங்க நிகழ்வில் கலந்து கொள்ள விடாமல் மற்றுமோர் ஆளுநர் செயல்பட்ட விதம் என்பன குறித்து அதிகம் விமர்சிக்கப்பட்டது. இது தொடர்பில் ஆதாரங்களும் முன்வைக்கப்பட்டன.

இதனிடையே, இந்த ஆளுநர்களில் ஒருவர் ஜனாதிபதியின் மூத்த ஆலோசகர் வழங்கிய ஆலோசனையையும்கூட நிராகரித்தார் என்று சுட்டிக்காட்டப்பட்டது. இதன்போது, அந்த ஆலோசகரும் இந்தக் கூட்டத்தில் இருந்தார் என்று கூறப்படுகின்றது.

இது தவிர, வேறு பல குற்றச்சாட்டுகளும் ஆளுநர்கள் குறித்து பாராளுமன்ற உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்டன. இதையடுத்து அவர்கள் இருவர் தொடர்பிலும் விரைவில் முடிவு எடுக்கப்படும் என்று பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி உறுதியளித்தார் என்றும் அறிய வருகின்றது. (ஐ- சி)

## ஊழியர்...

அர்ப்பணிப்புடன் செயல்படும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

இதேவேளை, தேசிய கடன் மறுசீரமைப்பு நடவடிக்கையின் போது ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவற்றுக்கு பாதிப்பு ஏற்படாது என்பதை அரசாங்கத்தால் உறுதிப்படுத்த முடியுமா? என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அண்மையில் கேள்வி எழுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ராஜபக்ஷக்களை...

சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்துக்கு பொதுஜன பெரமுனவினர் வழங்கிய வாக்குகள் பெறுமதியற்றவை ஆகும். தத்தமது அதிகாரங்களைத் தக்கவைத்துக்கொள்வதற்காக மாத்திரமே அவர்களின் கைகள் உயர்த்தப்பட்டன. மக்களுக்காக அவர்கள் வாக்களிக்கவில்லை. மக்கள் ஆணை பெற்ற எவரும் அங்கத்துவம் பெறாத தற்போதைய பாராளுமன்றம் செல்லுபடியற்றதாகவே காணப்படுகிறது.

இவ்வாறான பாராளுமன்றமே நாணய நிதியத்துடனான ஒப்பந்தங்களை சட்டமாக நடைமுறைப்படுத்த அனுமதி வழங்கியுள்ளது. ஆனால், மக்கள் இதனை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. எனவே தான், இந்த பாராளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தலுக்கு செல்லுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தொடர்ந்தும் வலியுறுத்திக் கொண்டிருக்கின்றோம்.

ஆனால், மறுபுறம் மே தினக் கூட்டத்தில் மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமிப்பதற்கான கோரிக்கை விடுக்கப்படவுள்ளதாக தெரியவருகிறது. மே தினத்தை அடிப்படையாகக் கொண்டு பழைய தலைவர்களை மீண்டும் பதவிகளில் அமர்த்துவதற்கு பொதுஜன பெரமுன முயற்சித்து வருகிறது.

ராஜபக்ஷக்களை மீண்டும் முன்னிலைப்படுத்தவே இந்த முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே மீண்டும் நாட்டின் தலைவரானால் அதற்கான வாய்ப்புகள் அதிகமாகும் - என்றார். (ஐ)

## அரசியல்...

திஷ்டை செய்யவும் நீதிமன்றம் அனுமதியளித்தது.

இதைத் தொடர்ந்து கடந்த வெள்ளிக்கிழமை ஆலயத்தில் விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டன. இந்த நிலையிலேயே நேற்றைய தினம் சுமந்திரன் எம். பி., வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம், வடக்கு மாகாண சபை முன்னாள் சபை உறுப்பினர்களான ஜி. ரி. லிங்கநாதன், ச. சுகிர்தன், கேசவன் சயந்தன், து. ரவிகரன் மற்றும் மூத்த சட்டத்தரணி தி. திருவருள் மற்றும் திலீப் காந்தன், கீர்த்தனன், இளஞ்செழியன், திபின்சன் ஆகியோரும் சென்றிருந்தனர். (ஐ)

## வெடுக்குநாறி...

வெளியிட்ட சுமந்திரன் எம். பி., “வெடுக்குநாறி மலைக்கு பொதுமக்கள் சுதந்திரமாக வந்துசெல்ல அரச அதிகாரிகள் இடமளிக்கவேண்டும் என்பதே நீதிமன்றின் கட்டளையாக இருக்கின்றது”, என்றார். (ஐ)

## மின்சாரம் ...

களின் தந்தை யான செல்வராசா சுஜிதரன் (வயது 40) என்பவரே உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் கோப்பாய் பிர தேச மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## நாட்டை...

தொழில். இதனூடாக அவர்கள் தங்கள் சுயலாப அரசியலை முன்னெடுத்து வருகின்றனர்.

ஹர்த்தால் போராட்டங்கள் மூலம் எதையும் சாதிக்க முடியாது. தமிழ் மக்களை ஏமாற்றவே இப்படியான போராட்டங்களை தமிழ்க் கட்சியினர் நடத்துகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நேற்றைய தினம் அநுராதபுரத்துக்க வந்த அமைச்சரிடம் செய்தியாளர்கள் வடக்கு - கிழக்கில் முன்னெடுக்கப்பட்ட ஹர்த்தால் தொடர்பில் கேள்வி எழுப்பிய போதே மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

# இந்திய விமானப் படை தளபதி இன்று வருகிறார்

கொழும்பு, மே 01

பிராந்தியங்களுக்கிடையிலான சமுத்திர கண்காணிப்பு நடவடிக்கைகள், கூட்டுப்பயிற்சிகள் உள்ளிட்ட பல்வேறு முக்கிய விடயங்கள் குறித்து இலங்கையின் உயர்மட்ட குழுவினருடன் கலந்துரையாடல்களை முன்னெடுப்பதற்காக இந்திய விமானப்படைத் தளபதி எயார் சீப் மார்ஷல் விவேக் ராம் சௌத்ரி இலங்கைக்கு 5 நாட்கள் உத்தியோக பூர்வ பயணமாக இன்று நாட்டுக்கு வருகிறார்.

இது தொடர்பில் இலங்கை விமானப்படை தலைமையகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்படுவதாவது:

விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரணவின் அழைப்புக்கமைய, இந்திய விமானப்படைத் தளபதி எயார் சீப் மார்ஷல் விவேக் ராம் சௌத்ரி உள்ளிட்ட நால்வர் அடங்கிய தூதுக்குழு நாட்டுக்கு வரவுள்ளது.

இந்த பயணத்தின்போது பிரதானமாக பிராந்திய விமானப்படைகளுக்கிடையில் ஒத்துழைப்பை மேம்படுத்தல், கூட்டுப் பயிற்சிகள் மற்றும் தொழில்நுட்ப அனுபவப் பகிர்வுகள், சமுத்திர கண்காணிப்பு நடவடிக்கைகள் உள்ளிட்டவை தொடர்பில் இரு தரப்பு கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அத்தோடு, இந்திய விமானப்படைத் தளபதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்த்தன, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் மற்றும் பாதுகாப்பு செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரத்ன உள்ளிட்டோரையும் சந்திக்கவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஐக்கிய மக்கள் சக்தியினர் எம்முடன் இணைவார்கள்!

## பாலித ரங்கே பண்டார

கொழும்பு, மே 01

ஐக்கிய மக்கள் சக்தியின் எம். பிக்கள் எம்முடன் இணைவர் என்று ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சியினர் முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களுக்கு வருகை தரவுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில், எமது அரசியல் செயல்பாடுகள் கொண்டு செல்லப்படவில்லை. கடந்த முறை போன்று இந்த முறை மே தினக்கூட்டத்தை பெருமளவில் நாம் நடத்தவில்லை.

எனினும், அனைத்து அமைப்பாளர்களும் தங்களின் தொகுதிகளில் இருந்து கட்சியை நேசிப்பவர்களுடன் ஒன்றிணைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியினர் முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களுக்கு செல்லவுள்ளனர். இதன்போது, பலர் எம்முடன் இணைவார்கள் - என்றார். (ஐ)

# எக்ஸ்பிரஸ் கப்பல் விவகாரம் அறிக்கை தயாரிக்கப்படவில்லை!

கொழும்பு, மே 01

எக்ஸ் பிரஸ் பேர்ள் கப்பலால் இலங்கையின் சுற்றுச்சூழலுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கான நஷ்டஈடு உள்ளிட்ட தகவல்கள் அடங்கிய விரிவான அறிக்கை இதுவரை தயாரிக்கப்படவில்லை என கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

குறித்த அறிக்கையை எவ்வாறு தயாரிப்பது என்பது தொடர்பிலான தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக சட்ட மா அதிபருடன் கலந்துரையாடுவதற்கு சந்தர்ப்பம் கோரியுள்ளதாக கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் அசேலபி. ரெக்கவ குறிப்பிட்டுள்ளார்.

அந்த கலந்துரையாடலின் அடிப்படையில் அறிக்கையை தயாரிக்கப்படவுள்ளது.

சட்ட மா அதிபர் திணைக்களம் கோரியுள்ள அறிக்கை தொடர்பில் தெளிவற்ற நிலை காணப்படுவதன் காரணமாக இந்த கலந்துரையாடலுக்கு சந்தர்ப்பம் கோரியதாகவும் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை குறிப்பிட்டது.

எக்ஸ் பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தால் சூழலுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு நஷ்டஈடு கோரி சிங்கப்பூர் நீதிமன்றத்தில் அண்மையில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அறவிடுவதற்கு எதிர்பார்க்கப்படும் நஷ்ட ஈடு தொடர்பில் நீதிமன்றத்திற்கு அறிவிப்பதற்காக கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையிடம் அறிக்கை கோரப்பட்டுள்ளது. (ஐ)

## மீண்டும்...

முன்னர், 16 ஆயிரத்து 841 பேர் கொரோனா தொற்றால் உயிரிழந்தனர். இந்நிலையில், மீண்டும் கொரோனா தொற்று பலி அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, கொரோனா தொற்று பரவல் குறித்து மக்கள் எச்சரிக்கையுடன் இருப்பதுடன், தொற்றிலிருந்து காக்க பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றுமாறு ஐ. டி. எச். மருத்துவமனை அறிவுறுத்தியுள்ளது. (ஐ)

# விவசாயிகளுக்கான முக்கிய அறிவிப்பு

கொழும்பு, மே 01

தற்போது நிலவும் மழையுடனான வானிலையை கருத்தில்கொண்டு, மழை நீரை பயன்படுத்தி நிலத்தை தயார்படுத்துமாறு நீர்ப்பாசன திணைக்களம் விவசாயிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

பல நீர்ப்பாசன நீர்த்தேக்கங்களின் தற்போது நீர்மட்டம் 64 வீதத்தை எட்டியுள்ளதாக நீர் முகாமைத்துவ பணிப்பாளர் பொறியியலாளர் சுதர்ஷனி விதானபத்திரண தெரிவித்துள்ளார்.

ஈழநாடு
Eelanadu



## குளவி கொட்டுக்கு 8 பேர் பாதிப்பு!

கொழும்பு, மே 01

கண்டி, சோகம மத்திய பிரிவிலுள்ள 15ஆம் இலக்க தோட்டத்தில் கொழுந்து பறித்துக்கொண்டிருந்தவர்கள் மீது குளவி கொட்டியதில் 8 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சோகம மத்திய பிரிவில் நேற்று முன்தினம் மாலை 15 ஆம் இலக்க தேயிலை மலையில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்தவர்களே இவ்வாறு குளவிக்கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

இவர்களில் ஒரு பெண் கம்பளை ஆதார மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன் எஞ்சியவர்கள் புசல்லாவை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர்களில் சிலர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர் என்றும் தெரிய வருகின்றது.

## மாணிக்கம் பதித்த புத்தர் சிலைகளுடன் நால்வர் கைது!

கொழும்பு, மே 01

மாணிக்க கற்கள் பதிக்கப்பட்ட புத்தர் சிலையை 22 இலட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்ய முற்பட்ட ஆயுர் வேத வைத்தியர் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பளபளப்பான கற்களைக் கொண்ட இந்த சிலைகளை புதையல் ஒன்றில் இருந்து பெற்றதாகக் கூறி குறிப்பிட்ட நபருக்கு விற்பனை செய்யச் சென்ற போதே அவர்களை மாத்தறை பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மற்றும் வழக்குப் பொருட்கள் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். (ஐ)

## மகிந்த ராஜபக்ஷ தலைமையில் பெரமுனவில் மே தினக் கூட்டம்!

### கோட்டாபய பங்கேற்க மாட்டார்

கொழும்பு, மே 01

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் மே தினக் கூட்டத்தில் பதவி விலகிய இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கலந்து கொள்ளமாட்டார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைவரான முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் இந்த பேரணி நடைபெறவுள்ளதாக அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் கோட்டாபய ராஜபக்ச கலந்து கொள்ளமாட்டார். இந்த பேரணிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டாலும் அவர் கலந்து கொள்ளாமல் பேரணியில் வாசிக்குமாறு செய்தி யொன்றை அனுப்புகிறார் என்றும் அவர் கூறினார். (ஐ)

## அரங்க கருத்தாடல் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், மே 01

திருமறை கலாமன்றத்தின் இலக்கிய அவையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அரங்கக் கருத்தாடல் நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு, இல.286 பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத் தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

'இந்தியத் தமிழ் நாடகங்களின் சமகாலப் போக்குகள்' என்னும் பொருளில் இடம்பெறவுள்ள கருத்தாடல் நிகழ்வில், தமிழகத்தின் அரங்கச் செயல்பாட்டாளரும் புதுச்சேரி, யாழ். அரங்கம் மற்றும் ஆய்வு நிறுவனத் தின் இயக்குநருமான கலாநிதி ஞா. கோபி கலந்து கொண்டு கருத்துரையை வழங்கவுள்ளார். தொடர்ந்து கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது.

ஆர்வமுள்ள அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத் துள்ளது. (ஐ)

# ஜனாதிபதி ரணிலின் காலத்தில் இனப் பிரச்னையை தீர்க்கலாம்!

### கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, மே 01

**இனப் பிரச்னையை தீர்ப்பதற்கான தருணம் ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்கவின் காலத்தில் ஏற்பட்டுள்ளதாக கல்வி இரா ஜாங்க அமைச் சர் அரவிந்தகுமார் தெரிவித்தார்.**



சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைத்த பின்னர் ஏனைய நாடுகளின் நம்பிக்கையை பெற்றுக் கொள்ளக்கூடியதாக அமைந் துள்ளதாகவும் ஜனாதிபதியின் நடவடிக்கை காரணமாகவே இந்த உதவி கிடைத்ததாகவும் அவர் தெரிவித்தார்.

களுவாஞ்சிகுடிக்கு நேற்று வந்த இராஜாங்க அமைச்சரிடம் எழுப் பப்பட்ட கேள்விகளுக்கு பதில ளித்தபோதே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

இந்த நாடு மிக விரைவாகவும் துரிதமாகவும் பழைய நிலைமைக்கு திரும்பி வருகின்றது. அதற்கு வித் திட்டவர் இன்றைய ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க என்றால் அதனை யாரும் மறுக்கமுடியாது. புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்துக்கு எதிராகவே நான் வாக்களிப்பேன். அது பாராளு மன்றத்தில் சமர்ப்பிக் கப்பட்டால் எதிராகவே வாக்களிப் பேன்.

ஐ. எம். எவ். உதவிகள் வர வேற்க கூடியவை. முதல்கட்டமாக வழங் கிய தொகையானது எமது நாட் டின் தேவைக்கு போதுமான தாக இல்லாத நிலையே உள்ளது. இதனை வழங்குவதற்கு அவர்கள் முன்வைத்த நிபந்தனைகள் மிகவும் கடுமையானதாகவே இருந்தது.

அந்த நிபந்தனைகளை பூர்த்தி செய்தால் மட்டுமே கடனுதவி வழங்கப்படும் என்பதில் ஐ. எம். எவ். உறுதியாக இருந்தது. அந்த நிபந்தனைகளை நிறைவுசெய்து அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி கடனுதவியைப் பெற்றுக்கொள்வதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயல்பாடு முக்கியத்துவமான தாகும்.

சர்வதேச நாடுகளுடன் அவருக்கு இருக்கும் நல்லுறவு, அவரின் அனுபவமே இவற்றை செய்யக் கூடியதாக இருந்தது என்றும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார். (ஐ)

# பிரபல இலங்கை ஆய்வாளருக்கு கனடாவில் கசப்பான அனுபவம்!

கொழும்பு, மே 01

இலங்கையின் பிரபல உயிரி யலாளர் கலாநிதி ஆஷா டிவோஸ் கனடாவில் தனக்கு நேர்ந்த கசப் பான சம்பவம் குறித்து வெளிப் படுத்தியுள்ளார்.

ஆஷா டிவோஸ், திமிங்கலங்கள் தொடர்பான இலங்கையின் பிரபல உயிரியலாளராவார். இவர் கனடா வில் விரிவுரை ஒன்றுக்கு சென்றி ருந்தபோது தனக்கு நேர்ந்த சம்ப வத்தை டுவிற்றரில் பதிவிட்டுள் ளார்.

அண்மையில், கனடாவின் விக் டோரியாவில் விரிவுரை வழங்கச் சென்ற இவர், பிரதான நுழைவாயி லில் இருந்து அந்த இடத்துக்குள் நுழைந்தபோது உடனடியாக பதிவாளர் பொறுப்பில் இருந்த பெண் தடுத்து நிறுத்தி துப்புரவு பணியாளர்கள் நுழையும் கதவு இதுவல்ல என சுட்டிக்காட்டி யுள்ளார்.

மேலும், வேலையாட்கள் நுழை யும் கதவின் வழியாக உள்ளே செல்லவும் அந்த இளம் பெண் கூறியுள்ளார் என்று அங்கு நடந்த சம்பவத்தை குறிப்பிட்டுள்ளார்.

நான் விரிவுரைக்குச் சென்ற இடத்தில் "துப்புரவு பணியாளர்கள் இந்தக் கதவு வழியாக செல்கி றார்கள்", என்று அந்த இளம் பெண் என்னிடம் மற்றொரு கதவைக் காட்டியபோது, நான் அவளைத் திரும்பிப் பார்க்கச் சொன்னேன். அங்கு எனது புகைப்படத்துடன் கூடிய ஒரு பேனர் தொங்கவிடப் பட்டிருந்தது", என்றும் குறிப்பிட் டுள்ளது.

கலாநிதி ஆஷா டிவோஸ் திமிங் கலங்கள் குறித்து பல ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார். மேலும், அவர் இலங்கையில் ஓசியன்ஸ்வெல் என்ற ஆராய்ச்சி நிறுவனத்தையும் நடத்தி வருகிறார். (ஐ)

# நாணய நிதியத்தின் உதவிகளை மாத்திரம் பொருளாதார மேம்பாட்டுக்கு நம்பாதீர்கள்!

### றிசாத் பதியுதீன் எம். பி. ஆலோசனை

கொழும்பு, மே 01

நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளை மாத்திரம் நம்பியிராமல், சரியான சீர்திருத்தங்களை முன்னெடுக்க வேண்டுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

"நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வதைத் தவிர வேறு வழிகள் இருக்க வில்லை. எதிர்க்கட்சி எம். பிக்க ளும் இந்த யதார்த்தத்தை ஏற்றுக் கொண்டுதான் இங்கு உரையாற் றினர். ஆனாலும், தொடர்ந்தும் கையேந்துகின்ற நிலைக்கு எமது நாட்டை இட்டுச்செல்லாமல், சொந்த முயற்சியில் முன்னேறுவது குறித்து சிந்திப்பது அவசியம். எனவே, பொருளாதார மேம்பாடுக ளுக்கென தங்களால் வழங்கப்படும் ஆலோசனைகளையும் அரசாங்கம் கருத்திலெடுப்பதே சிறந்தது.

1991இல் இந்திய நிதியமைச் சராக இருந்த மன்மோகன் சிங் அறிமுகப்படுத்தியது போன்ற காணிச் சீர்திருத்தங்களை மேற் கொள்வது அவசியம். இறக்குமதிப் பொருட்களுக்குப் பதிலாக ஏற்றுமதிகளை அதிகரிப்பதுதான் இதற்குள்ள வழி. இதற்காக ஏற்று மதியாளர்களை ஊக்குவிப்பது, சுற்றுலாத்துறையை முன்னேற் றுவது உள்ளிட்ட செயல்திட் டங்களே தேவைப்படுகின்றன. நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு வழிகாட்டல்கள் தேவை. அவர்களைக் கௌரவிக்கும் செயல்பாடுகளால்தான் சுற்று லாத்துறையைக் கவர முடியும். மாறாக அவர்களை அச்சுறுத்துவது அல்லது அசிங்கப்படுத்துவதான செயற்பாடுகள், சர்வதேசத்தில் எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தும்.

வடக்கு, தெற்கை இணைக்கும் புத்தளம் - மன்னார் பாதையை திறக்குமாறு நாம் ஆலோசனை கூறினோம். இதுவும் கருத்தில் எடுக்கப்படவில்லை. ஏற்கனவே திறக்கப்பட்டிருந்த முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வே மூடினார். இப்பாதையூடாகப் பயணித்தால் நூறு கிலோமீற்றர் தூ ரத்தை மிச்சப்படுத்தலாம். நேரம், எரிபொருள் என்பவை இப்பயணத்தால் மீதமாகின்றன. இதனால், வடக்கு, தெற்கு வியாபாரப் பொருட்களுக்கான விலைகளையும் குறைக்க முடியும்.

இதுபோன்றுதான் தலைமன்னார், இராமேஸ்வர கப்பல் போக்குவரத்தும். இது, நாட்டின் வருமானத்துக்கு பெரும் பங்களிப்புச் செய்கிறது. அதிகளவான இந்திய சுற்றுலாப் பயணிகளை இந்தக் கப்பல் போக் குவரத்தால் உள்ளீர்க்க இயலும் - என்று வெள்ளிக்கிழமை பாராளுமன்றில் உரையாற்றிய போது தெரிவித்தார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.05.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.